Registered as a news paper.
பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 30 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 14 (13.05.2006) சனிக்கிழமை இதழ் 225

# கடற்படையினரை சுதந்திரமாக நடமாட அனுமதிக்க முடியாது!

## புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி —

தாயகக் கடற்பரப்பில் கடற்புலிகளின் போக்குவரத்து, நடமாட்டங்கள், பயிற்சிகளுக்கு இடையூறுகளை விளைவிக்கும் வரை - இலங்கைக் கடற்படையை சுதந்திரமாக நடமாட அனுமதிக்க முடியாதென போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனிடம் விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை கிளிநொச்சிக்கு அவசர விஜயத்தை மேற் கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுடன் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களிடம் விளக்கமளிக்கையில் -

(02 ஆம் பக்கம் பார்க்க)



## வெற்றிலைக்கேணி கடற்சமரில் வீரச்சாவடைந்த மாவீரர்கள்!

கிளிநொச்சி —

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகள் மீது நேற்றுமுன்தினம் கடற்படை மேற்கொண்ட தாக்குதலில் இரு பெண் போராளிகள் உட்பட நான்கு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

இந்த மாவீரரார்களின் விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

✦ லெப்டினன்ட் கேணல் சஞ்சனா அல்லது புலிச்செல்வி (ஜெனீத்தா புஸ்பராஜா - நிரந்தர முகவரி: பருத்தித்துறை, யாழ்ப்பாணம். தற்காலிக முகவரி:மாத்தளன், புதுக்குடியிருப்பு).

## கடல் நடவடிக்கையில் ஈடுபட புலிகளுக்கு உரிமை உள்ளது

### கண்காணிப்புக்குழுவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

இந்த மாவீரரார்களின் விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

✦ லெப்டினன்ட் கேணல் சஞ்சனா அல்லது புலிச்செல்வி (ஜெனித்தா புஸ்பராஜா - நிரந்தர முகவரி: பருத்தித்துறை, யாழ்ப்பாணம். தற்காலிக முகவரி:மாத்தளன், புதுக்குடியிருப்பு).

✦ லெப்டினன்ட் கேணல் அன்பு (அமுத சுமணா நாகேஸ்வரன் - மகான் வீதி , ஆழியவளை, வடமராட்சி கிழக்கு).

✦ லெப்டினன்ட் கேணல் கவியழகி (சாந்தினி பேதுருப்பிள்ளை - மணற்காடு, வடமராட்சி கிழக்கு).

(08 ஆம் பக்கம் பார்க்க)

# சலூன் உரிமையாளர்

## தம்பாலையில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்

அச்சுவேலியில் நேற்றுக்காலை குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளரான அச்சு வேலி வடக்கு தம்பாலையைச் சேர்ந்த கந்தையா சிவஞானம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை மூதூரிலும் சுட்டுக்கொலை

திருகோணமலை

திருகோணமலை - மூதூர் - கட்டைபறிச்சானில் சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சூர்யா என்று அழைக்கப்படும் சுரேந்திரன் (வயது 22) என்பவரே

(08 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவன் சுட்டுக்கொலை!

திருகோணமலை

திருகோணமலை - மூதூரில் மாணன் ஒருவர் நேற்று இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 8.45 மணியளவில் மூதூர் நகரத்திலுள்ள தேவாலய வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ்.பாலகுமார் (வயது 17) என்ற மாணவனே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

கிளிநொச்சி

போர்நிறுத்த உடன்பாட்டுக்கமைய தமது கட்டுப்பாட்டிலுள்ள கடற்பிரதேசத்தில் கடற்புலிகள் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான முழு உரிமையும் உள்ளதென இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

வெற்றிலைக்கேணி கடற்சமர் தொடர்பாக கருத்து வெளியிட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் - விடுதலைப் புலிகளுக்கு இலங்கை கடலில் உரிமை இல்லையென்று தெரிவித்திருந்தனர்.

இதற்குப் பதிலளித்து கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹென்றிக்சனுக்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

போர்நிறுத்த ஒப்பந்தமானது இராணுவச் சமநிலையை அடிப்படையாகக் கொண்டது. போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர இராணுவச் சமநிலை அவசியமானது என்பது சாதாரண உண்மை.

இந்த இராணுவச் சமநிலைக்கு - போர்நிறுத்தலொப்பந்தத்துக்கு முன்னரே கடற்புலிகள் பங்களிப்புச் செய்துள்ளனர். எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் கடற்பிரதேசங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த உண்மை கடந்த 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்ட அறிக்கையிலும் உறுதிப்படுத்தப்பட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தம் கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# இரு ஊர்காவல் படையினர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

கொழும்பு

அனுராதபுரம் பதவியா பொலிஸ் பிரிவில் ஊர்காவல்படையைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பதவியாவைச் சேர்ந்த விஜேரட்ன என்ற ஊர்காவலரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அதேவேளை அம்பாறை - டயந்தலாவவில் நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் படுகாயமுற்ற ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் மரணமானார்.

நேற்றுமுன்தினம் மாலை 7.45 மணியளவில் பொலிஸ் வீதித்தடையில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் கடற்படைத் தளமருகே

# கழுத்து வெட்டி புதைக்கப்பட்ட இளைஞனின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்

காரைநகர்-தோப்புக்காடு கடற்படையின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து வெட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மீட்கப்பட்ட சடலம் காரைநகர் - ஊரிக்காட்டைச் சேர்ந்த சீவல் தொழிலாளியான இராசன் சாந்தகுமார் (வயது 26) என என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

நேற்றுமுன்தினம் காலை வழமை போல் சீவல் தொழிலுக்குச் சென்ற இவர் மாலைவரை வீடு திரும்பவில்லை. இதனையடுத்து தேடிச்சென்ற உறவினர்கள் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கடற்படையினரின் உயர்பாதுகாப்பு வலயத்தில் சனநடமாட்டமற்ற

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையினர் சுதந்திரமாக நடமாட...

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியதாவது -

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக கண்காணிப்புக்குழுத் தலைவரை அழைத்து எமது தலைமைப்பீடத்தின் மிகக் கடுமையான அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்திருக்கிறோம்.

எங்கள் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கடற்பிராந்தியம் மற்றும் வான்பரப்பு எங்களுக்கு உரித்தில்லை என கண்காணிப்புக்குழுவினர் நேற்றுமுன்தினம் அறிக்கை வெளியிட்டிருந்தனர். இப்படியான அறிக்கையை வெளியிடுவதற்கு கண்காணிப்புக்குழுவுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

அமைதி முயற்சி மற்றும் சமாதான முயற்சிகள் அனைத்துமே இரு சமதரப்பு என்கின்ற அடிப்படையில்-இரு தரப்பினரது படை வலுச்சமநிலை என்ற அடிப்படையில்தான் போர்நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்துதான் அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

**சமனிலையைத் தகர்க்கும் கண்காணிப்புக்குழு அறிக்கை**

எங்களை ஒரு அரசசார்பற்ற சக்தியாகப் பார்ப்பதற்கு இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்படவில்லை.

அரசபடைகளும் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளோடு இராணுவ ரீதியாக வெற்றிகொள்ளமுடியாது என்ற யதார்த்தத்தின் அடிப்படையில் இவர்கள் அமைதிப்பேச்சுக்கு வந்தனர். இரண்டு தரப்பையும் இரு தரப்பாக நோர்வே அனுசரணையாளர்கள் அங்கீகரித்துத்தான் இந்த ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டது. சமாதான முயற்சிகள் நடைபெற்றன. இந்த நிலையில் தான் அரசாங்கமும் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தது.

இதைத் தகர்க்கும் வகையில், பலவீனப்படுத்தும் வகையில் கண்காணிப்புக் குழுவினர் நேற்று வெளியிட்ட அறிக்கை மிகவும் பாரதூரமான விடயமாகத்தான் உள்ளது.

எங்கள் மக்கள்கூட கொதித்துப் போய் இருக்கிறார்கள். எங்கள் மக்கள் பாரிய தியாகங்களை செய்துதான் எமது விடுதலைப்போராட்டம் இந்த உயர்நிலையை அடைந்திருக்கின்றது. அப்படியான எங்களது உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கண்காணிப்புக்குழுவின் அறிக்கை பாரதூரமானது என்றும் உடனடியாக பதில் தரவேண்டும் என்றும் அவர்களிடம் கேட்டுள்ளோம்.

தமிழர் தாயகத்தை அரச படைகள் முற்றாக ஆக்கிரமித்து எமது தாயகத்தை அழிக்கும் முயற்சிகளை மேற்கொண்டது. அந்த நிலையில் எங்களுடைய மக்களும் விடுதலை அமைப்பும் எமது தலைவரின் தலைமைக் குப்பின்னால் அணிதிரண்டு போராடி பல்லாயிரக்கணக்கான படைகள் நிலைகொண்ட நிலையிலும் 70 சதவீதமான நிலப்பிரதேசத்தை மீட்டெடுத்தோம்.

நாங்கள் இராணுவ வெற்றிகளைப் பெற்று ஒரு நடைமுறை அரசையே இயக்கும் வலிமையைப் பெற்ற பின்னர்தான் அரசாங்கமே இருதரப்பு என்றும், படைவலுச்சமநிலை என்றும் அங்கீகரித்துக்கொண்டும் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தது. இதன் அடிப்படையில்தான் போர்நிறுத்த ஒப்பந்தம் உருவானது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கூட எங்கேயும் அரசு என்றும் எம்மை ஒரு ஆயுதக்குழு என்றோ அல்லது வேறு சொற்பதங்களிலோ குறிப்பிடப்படவில்லை. இருதரப்புக்கள் என்றுதான் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை. இந்த நடைமுறையின் கீழ்தான் பேச்சுவார்த்தைகளும் பல கட்டங்களாக நடைபெற்றன. இதைச் சீர்குலைக்கும் வகையிலும், கொச்சைப்படுத்தும் வகையிலும், பலவீனப் படுத்தும் வகையிலும் எந்தவிதமான அறிக்கையையும் வெளியிடுவதற்கு கண்காணிப்புக்குழுவுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்பதை நாங்கள் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு சுட்டிக்காட்டினோம்.

எந்த அடிப்படையில் இந்தப்பேச்சுவார்த்தைகள் தொடக்கப்பட்டன என்ற வரலாற்றையும் கூட விரிவாக இன்று கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு விளக்கினோம்.

**படுகொலைப் படைக்கு வழித்துணையா?**

இலங்கை இராணுவத்தினரது போக்குவரத்துக்கு கண்காணிப்புக்குழு வழித்துணை வழங்குவது பாரதூரமான தவறு என்று நேற்றைய சந்திப்பில் தெரிவித்தோம். மேலும் எமது போராளிகளுக்கும் எமது போராளிகளின் போக்குவரத்துக்கும் கண்காணிப்புக்குழு வழித்துணை வழங்கியதா என்றும் நாம் கேள்வி எழுப்பியபோது பதில் கூறஇயலாமல் அவர் இருந்தார்.

கண்காணிப்புக்குழு என்பது இருதரப்பையும் சமதரப்பாக ஏற்றுக்கொண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களின் அடிப்படையில் செயற்படுவதற்குத்தான் கண்காணிப்புக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது. இதைமீறி கண்காணிப்புக்குழு செயற்படமுடியாது. அதைவிடுத்து கடற்படையினரது படகில் ஏறி விடுமுறையில் செல்லும் படையினருக்கு பாதுகாப்பும் வழித்துணையும் வழங்குவது என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

ஏனெனில், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மறுக்கப்பட்ட நிலையில் படைத்தரப்புக்கு அப்படியான ஒரு பாதுகாப்பை கண்காணிப்புக்குழு வழங்குவதை ஏற்க முடியாது என்று தெரிவித்தோம்.

எங்களுடைய போராளிகள், தளபதிகள் கிழக்கிலிருந்து கிளிநொச்சிக்கு எங்களுடைய கடற்கலங்களில் போக்குவரத்து மேற்கொள்கின்றனர். ஆகையால் உங்களது கடற்கண்காணிப்பு அதிகாரிகளை உடனடியாக வழித்துணை வழங்கவும், பாதுகாப்பு வழங்கவும் அனுப்புங்கள். இதை உடனே செய்யவேண்டும். அரச தரப்பினருக்கு இத்தகைய ஏற்பாட்டைச் செய்யும் நீங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் செய்தாக வேண்டும். போர்நிறுத்த ஒப்பந்தத்தின் இருதரப்பினரையும் சமமாகப்பாவித்துத்தான் கண்காணிப்புக்குழுவினரது பணிகள் அமையவேண்டும் என்றும் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் கூறினோம்.

மேலும் தீர்ப்பு வழங்குதல் அல்லது வழித்துணை வழங்குதல் என்பவற்றில் இருதரப்பினரையும் சமமாக நீங்கள் பாவிக்கவேண்டும். இதில் ஒரு தலைப்பட்சமாக பக்கச்சார்பாக நடந்து கொண்டதை எமது விடுதலை அமைப்பு பாரதூரமாக கருதுகிறது. நீங்கள் வெளியிட்ட அறிக்கை மிகத் தவறானது. ஆகவே இதற்கு உடனடியாகப் பதில் தரவேண்டும் என்றும் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் தெரிவித்தோம்.

இது பற்றி நோர்வே அனுசரணையாளர்களுடன் கலந்து பேசி முடிவெடுப்பதாக கூறிவிட்டுச்சென்றனர். இதுதான் அவர்களிடமிருந்து எங்களுக்குத் தரப்பட்ட பதிலாகும்.

அதேபோல் எமது மக்களைப்படுகொலை செய்யும் படையினருக்கு பாதுகாப்பையும் வழித்துணையையும் நீங்கள் வழங்குகின்றீர்கள். வான்பரப்பிலிருந்து எமது மக்கள் மீது குண்டுவீச்சு பொழிகிறது. ஆட்லறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகிறது. கடற்படைக்கப்பல்களிலிருந்து பீரங்கித்தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். இதைத் தடுக்க ஏன் கண்காணிப்புக்குழு முயலவில்லை என்றும் அவரிடம் கேட்டோம்.

ஜெனிவாப்பேச்சுக்குப் பின்னர் வீதி வீதியாக 160 தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர், நாளாந்தம் காணாமல் போகின்றனர், கடத்தப்பட்டுள்ளனர். நாளா ந்தம் எமது மக்களுக்கு அச்சுறுத்தல்களும் அவலங்களும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

திருகோணமலையில் முப்படைகளும் பார்த்துக்கொண்டிருக்க எங்களுடைய மக்களை வன்முறையாளர்கள் வெட்டுகிறார்கள். படுகொலை செய்கிறார்கள். சொத்துக்களை அழிக்கிறார்கள். ஆனால் கண்காணிப்புக் குழுவோ பாதுகாப்புக் கருதி வெளியே வராமல் இருக்கின்றார்கள் என்று எங்களுக்கு சொல்கிறீர்கள் - எங்கள் மக்களுக்கு சொல்கிறீர்கள்.

இப்படியான படுகொலைப் படைக்குப் பாதுகாப்பை கண்காணிப்புக்குழு வழங்குவது என்ன வகையிலான நியாயம் என்று நாம் கேட்டோம். இதற்குப் பதில் சொல்ல முடியாமல் தான் கண்காணிப்புக்குழுத் தலைவர் இருந்தார். எங்களுடைய நிலைப்பாட்டை நாங்கள் மிகவும் இறுக்கமாகவே வெளிப்படுத்தியிருக்கிறோம்.

போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தொடர்பாக - கண்காணிப்புக் குழுவின் நடுநிலைமையற்ற - பக்கச்சார்பான நிலை குறித்து இதுவரை இல்லாத அளவுக்கு எங்களுடைய மக்கள் மிகவும் கொந்தளிப்பான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எமது தலைமைப்பீடமும் மிகவும் அதிருப்தியடைந்த நிலையில் இருக்கிறது.

இதற்காகத்தான் கண்காணிப்புக் குழுத் தலைவரை அழைத்து எமது வன்மையான கண்டனத்தையும், அதிருப்தியையும் தெரியப்படுத்தியிருந்தோம்.

தற்போது புதிதாக வந்திருக்கும் இந்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு முன்னைய கண்காணிப்புக் குழுத் தலைவர்கள் பின்பற்றிய நடைமுறைகள் மற்றும் அளித்திருந்த தீர்ப்புக்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் இன்று முன்வைத்தோம்.

முன்னைய கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒரு கட்டத்தில், விடுதலைப் புலிகளின் கடற்பிரதேசத்தில் பயிற்சி பெறுவதற்கு, ஆயுதங்களுடன் நடமாடுவதற்கு உரிமை இருக்கிறது என்று தெரிவித்திருந்தார். இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினோம்.

நடைமுறை யதார்த்தங்களைப் புறந்தள்ளிவிட்டு - நடைமுறைகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு - இந்த சமாதான முயற்சிகளுக்கு - அமைதி முயற்சிகளுக்கு - யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு மாறாக - எதிராக - கண்காணிப்புக் குழுவினர் அறிக்கைகளை வெளியிடுவதும், குறிப்புக்களை வழங்குவதும் நீங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் மிகக் கடுமையான தொனியில் கூறியுள்ளோம்.

இது தொடர்பில் அனுசரணையாளர்களிடமும் நாங்கள் முறையிடவுள்ளோம். கண்காணிப்புக் குழுவினரது இத்தகைய அறிக்கையானது அமைதிக்கான முன்னெடுப்புகள் - யுத்தநிறுத்த ஒப்பந்த விதிகள் அனைத்தையுமே தகர்க்கின்ற ஒரு அறிக்கை ஆகையால், இதற்கு எங்களுக்கு தீர்க்கமான பதில்தர வேண்டும் என்று அனுசரணையாளர்களிடம் நாம் விரைவில் தெரிவிக்கவுள்ளோம்.

**குண்டுவீச்சுக்கள் யுத்தநிறுத்த மீறலாகத் தெரியவில்லையா?**

கடலில் நடந்த சம்பவத்துக்கு உடனே அறிக்கை வெளியிட்ட கண்காணிப்புக் குழுவுக்கு திருகோணமலையில் எங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீதும், வன்னியிலும் குண்டு வீச்சை நடத்துவது உங்களுக்கு யுத்தநிறுத்த மீறலாகத் தெரியவில்லையா என்று நாம் கேட்டோம்.

எங்களால் அழிக்கப்பட்டு இயங்க முடியாமல் இருந்த குண்டுவீச்சு விமானங்கள் இன்று எங்கள் மக்கள் மீது குண்டு வீசிக்கொண்டிருக்கின்றன. நான்கு ஆண்டுகால சமாதான காலத்தைப் பயன்படுத்தி தங்களது படைகளைக் கட்டியெழுப்பி - எங்களது மக்களைப் படுகொலை செய்வதற்கு முழு நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டிருக்கிறார்கள்.

இதனால் நாங்கள் நிச்சயமாக மிக விரைவில் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இதை சர்வதேச சமூகத்துக்கும் தெரியப்படுத்துவோம். எங்கள் மக்களும் ஒரு தீர்மானத்துக்கு வருகின்ற நிலைமையில் விடுதலைப் புலிகளின் தலைமையும் ஒரு நல்ல தீர்மானத்தை - இறுக்கமான நிலைப்பாடை மேற்கொள்ளும்.

அனுசரணையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கிறோம். மிக விரைவில் அவர்களுடனான சந்திப்பை மேற்கொள்ளவுள்ளோம். வேறு வழிகளினூடாக எங்களது அதிருப்திகளை, அதிர்ச்சிகளை அனுசரணையாளர்களுக்குத் தொடர்ச்சியாகத் தெரிவித்துவருகிறோம்.

எங்கள் மக்களையும், எங்கள் குரல்வளையையும் அழுத்திப் பிடித்துக்கொண்டு பேசுங்கள்.... பேசுங்கள் என்று சர்வதேச சமூகம் கேட்டுக் கொண்டிருப்பது அர்த்தமற்றது என்று கண்காணிப்புக் குழுவினருக்கு இன்றைய சந்திப்பில் தெரிவித்தோம்.

கண்காணிப்புக் குழுவின் தலைமையிலான ஒரு முடிவெடுக்க கண்காணிப்புக் குழுவினரது உறுப்பினர்களை அழைத்துத் தீர்மானத்தை எடுக்கின்றீர்கள். அப்படியாகத்தான் தீர்ப்பு வழங்கமுடியும். நாங்கள் பேச்சுவார்த்தைக்குப் போகவேண்டுமெனில், எங்களுடைய கிழக்கு மாகாணத் தளபதிகள் இங்கே வந்து எமது தலைவரைச் சந்திக்காமல், பேசாமல், தீர்மானம் எடுக்காமல் எப்படிப் பேச்சுக்களுக்குப் போவது?

ஒரு சாதாரண விடயத்திலே அரசாங்கம் இவ்வளவு மோசமான நெருக்கடியை ஏற்படுத்தி அனைத்து முயற்சிகளையும் சீர்குலைத்து இருக்கிறது. ஜெனிவா பேச்சுக்கு நாம் செல்வதற்கு முன்பாக எமது தேசியத் தலைவரை எரிக் சொல்ஹெய்ம் சந்தித்தபோது எமது தாயகப் பிரதேசத்தில் படையினருக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தி எமது மக்கள் அமைதி காத்தனர்.

**எமது போக்குவரத்தைத் தடுத்துக்கொண்டு படைகள் பயணிக்க முடியாது.**

ஜெனிவா பேச்சு முடிந்தபின்னரும் மக்கள் அமைதி காத்தனர். ஆனால் படையினரும், துணை இராணுவக் குழுவினரும் நாளாந்தம் எங்கள் நிலைகள்மீதும் - மக்கள்மீதும் தாக்குதல்களை நடத்தினர், சீண்டிக்கொண்டிருக்கின்றனர். அதன் மோசமான விளைவாக திருகோணமலையில் தமிழ்மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

அதன்பின்னர்தான் மக்கள் ஒரு கொந்தளிப்பான நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதுவரை எமது மக்கள் பொறுமையாகவே இருந்தனர் என்பது உலகம் முழுமைக்குமே தெரியும். ஆகவே அந்த நிலைமையைச் சீர்குலைத்தது மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம்தான்.

மகிந்த அரசாங்கத்தை சரியான வழிக்கு சர்வதேச சமூகம் கொண்டுவரவேண்டும். இல்லையெனில் நிலைமையைச் சீராக்கமுடியாது. ஒரு யுத்த சூழ்நிலைக்குள் எங்களையும் எமது மக்களையும் தள்ளுகின்ற முயற்சியாகத்தான் அண்மைக்கால மகிந்த அரசாங்க நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

எங்களுடைய போக்குவரத்துக்களைத் தடுத்துக்கொண்டு அரசாங்கம் தனது போக்குவரத்துக்களைச் செய்யமுடியாது.

எங்களுடைய கடற்பிராந்தியத்தில் அவர்கள் சுதந்திரமாக விடுமுறையில் செல்கின்றார்கள். அவர்களது கடற்கலங்கள் எல்லாம் சுதந்திரமாகப் பயிற்சிகளையும், ஒத்திகைகளையும் மேற்கொள்கின்றன. அப்படியான நிலையில் எமது கடற்படையை நாம் முடக்கி வைத்துக்கொண்டிருக்க முடியாது.

எங்களுடைய போக்குவரத்துக்கள், பயணங்கள், நடமாட்டங்கள் சுதந்திரமாக நடமாடும்வரை படைகளுக்கும் அதை நாம் அனுமதிக்கப் போவதில்லை.

யுத்திநிறுத்த ஒப்பந்தத்தில் போக்குவரத்து நடைமுறைகள் மற்றும் சுதந்திரமான நடமாட்டங்கள் தொடர்பாகவும் இருதரப்பும் சமமானவை என்பது குறித்துத் தெளிவாக எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு இதைச் சுட்டிக்காட்டினோம்.

மேலும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருக்கின்றவற்றை எழுத்துக்கு எழுத்து, வரிக்கு வரி உன்னிப்பாக வாசித்துப் பாருங்கள். இந்த விடயங்களில் தமிழர் தரப்பில் - விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வளவு நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. படைத்தரப்பில் அரசாங்கம் எவ்வளவு நடைமுறைப்படுத்தியுள்ளது என்பதைப் பார்த்து அளவீடு செய்து கொள்ளுங்கள். போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட எந்தவொரு விடயத்தையுமே இலங்கை அரசாங்கமோ படையினரோ மதித்து நடக்கவில்லை என்பதுதான் பாரதூரமான விடயமாகும். இந்த விடயத்தைவிட்டு வைத்துக்கொண்டு போர்நிறுத்த மீறல்கள் பற்றி கண்காணிப்புக்குழு கதைத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றும் தெரிவித்துள்ளோம்.

**அறிக்கை வெளியிடுவதற்கான அமைப்பு அல்ல**

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்த அனைத்துத் தரப்பினருக்கும் உங்களது அழுத்தங்களைச் செலுத்துங்கள். சர்வதேச சமூகம் அதை செய்யட்டும். அதை விட்டுவிட்டு அறிக்கைகளை விட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இத்தகைய அறிக்கைகளை விடுவதற்கு எத்தனையோ அமைப்புக்கள் உள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள் என்று எத்தனையோ அமைப்புக்கள் இத்தகைய அறிக்கைகளை வெளியிடுவதற்கு உள்ளன. அவை அறிக்கைகளை வெளியிடட்டும்.

ஆனால், போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகளை, அம்சங்களை நடைமுறைப்படுத்துகிற கடப்பாடு கண்காணிப்புக்குழுவுக்கு உண்டு. இதிலிருந்து கண்காணிப்புக்குழு விலகி நின்று அறிக்கைகளை வெளியிடுவதால் பயனேதுமில்லை. ஆகையால் நீங்கள் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும் என்று நாம் வலியுறுத்தியுள்ளோம்.

இலங்கை அரசாங்கமும் படையினரும் போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு விரோதமாக செயற்படுகின்றபோது அவர்கள் சில நடவடிக்கைகளை மேற்கொள்கிற போது எமது தரப்பிலும் சில தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்படுவோம் என்று கண்காணிப்புக்குழுவுக்கு தெரிவித்துள்ளோம்.

**எங்களுக்கும் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை உண்டு**

அரசாங்கத்துக்கு ஒரு மட்டுப்படுத்த இராணுவ நடவடிக்கை முடிந்தால் - அதற்கு அவர்களுக்கு அதிகாரம் இருக்குமேயானால் விடுதலைப் புலிகளுக்கும் அதே அதிகாரம் இருக்கும். இரு சமதரப்பு, படை வலுச்சமநிலை இரண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில்தான் இந்த அமைதி முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆகையால் விடுதலைப் புலிகள் தங்களது உரிமையை அல்லது நிலைப்பாட்டை நடைமுறைப்படுத்தத் தயங்கமாட்டார்கள்.

போர்நிறுத்த ஒப்பந்த மீறல்கள் என்பது தொடர்பாக நன்கு ஆராய்ந்து தீர்ப்பளிக்கவேண்டும் என்று கண்காணிப்புக்குழுவுக்கு சுட்டிக்காட்டியுள்ளோம்.

எங்களுடைய கடற்பிராந்தியத்தில் எங்களுடைய கடற்படையினர் பயிற்சிகளிலும், நாளாந்த செயற்பாடுகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது இலங்கை கடற்படையினர் எங்களைச் சீண்டுகின்றனர். நாங்கள் எங்களது தற்காப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டிய நிலைக்கு ஆளாகிறோம்.

**இலங்கை கடற்படையினரால் தாக்குப்பிடிக்க முடியாது.**

500 முதல் 600 வரையிலான படையினர் சென்ற கப்பல் அங்கே தவித்துக்கொண்டிருந்தது எங்களுக்குத் தெரியும். கண்காணிப்புக்குழு இருந்தமையால்தான் நாங்கள் ஓரளவு சுயகட்டுப்பாட்டைப் பேணி இருக்கிறோம். எங்களுடைய படையணியினரால் தாக்கி அழிக்க முடியாமல் இல்லை. ஆனால் சுயகட்டுப்பாட்டோடும், பொறுமையோடும் நாம் இருந்தோம் என்பதை கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

இத்தகைய பொறுமையை தொடர்ந்தும் நீங்கள் எம்மிடம் எதிர்பார்க்க முடியாது என்று கண்காணிப்புக்குழுவுக்கு தெரிவித்துள்ளோம்.

அண்மையில் தென் தமிழீழ தளபதிகள், பொறுப்பாளர்களை வட தமிழீழத்துக்கு எமது கடற்கலத்தில் அழைத்துவந்தபோது இலங்கை கடற்படையினர் குறுக்கறுத்து தாக்க முயன்றனர். அந்த நேரத்தில் எங்களுடைய கடற்படையினர் உக்கிரத் தாக்குதலை நடத்த முனைந்தபோது இலங்கை படையினர் பின்வாங்கிக்கொண்டு ஓடிவிட்டனர். எங்களுடைய பயணம் சுமுகமாக முடிவடைந்தது.

இலங்கை கடற்படையினரால் எமது கடற்படையை தாக்குப்பிடிக்க முடியாது. இந்தநிலையில் எங்களை சீண்டி, எங்களைத் தடுக்க முயற்சிப்பது அவர்கள் சுதந்திரமாக நடமாட வேண்டுமென்பதும் நடைமுறைக்கு ஒவ்வாதது. ஆகையால் அதற்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

**எமது பொறுமையின் விளிம்புகளை சம்பவங்களே சொல்லும்.**

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்த அமைதி முயற்சிகளை உண்மையாகவே, மனப்பூர்வமாக விரும்புவார்களோயானால், இந்த போர்நிறுத்த ஒப்பந்தத்தை வரிக்கு வரி முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதைத் தவிர வேறு வழி இல்லை என்றும் எப்போதும் இல்லாதவாறு எமது வன்மையான, கடுமையான கண்டனத்தையும் நிலைப்பாடுகளையும் தெரிவித்துள்ளோம்.

இனியும் அமைதித் தூதுவர்கள் வருவார்களா? பேச்சுவார்த்தைகள் வருமா? வராதா என்பதை களநிலைமைகளே தீர்மானிக்கும். எங்களுடைய மக்களும், எமது தலைமைப் பீடமும் என்ன நிலைப்பாட்டை எடுக்கப்போகிறார்களோ அவற்றை உள்ளடக்கியதாகத்தான் அடுத்த இறுதிக் கட்டத் தீர்மானம் அமையும். அதற்காக நாங்கள் இன்னும் சிறிது பொறுமை காக்கவேண்டியிருக்கும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை பொறுமையின் விளிம்புக்கு பல முறை வந்துள்ளனர். இந்த முறையும் பொறுமையின் விளிம்பில்தான் நிற்கிறார்கள். எப்படியான விளிம்பில் நிற்கிறார்கள் என்பதை சம்பவங்களால்தான் உணர்த்தமுடியும். அறிக்கைகளால், பேச்சுக்களால் அதை உணர்ந்துகொள்ள முடியாது. நாளாந்த சம்பவங்களால் உணர்ந்து கொள்வதே அர்த்தமாக இருக்கும்.

**பேச்சுக்கள் தொடருமா என்பதை மகிந்தவிடம் கேட்கவேண்டும்**

எங்களுடைய மக்களது பாதுகாப்பு, எதிர்காலம் ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில்தான் மகிந்த அரசுடன் பேச்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சர்ச்சைக்குரிய நுரைச்சோலை அனல்மின் திட்டத்துக்கு அடிக்கல்

கொழும்பு —

சர்ச்சைக்குரிய நுரைச்சோலை அனல்மின் திட்டத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை அடிக்கல் நாட்டினார்.

இதனைத்தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேசியபோது -

எதிர்காலத் தலைமுறையினர் மின் பிரச்சனைக்கு முகம் கொடுக்கக் கூடாது என்பதற்காகவே நுரைச்சோலையில் அனல்மின் திட்டம் அமைக்கப்படுகிறது.



இந்த நாட்டில் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை இந்தத் திட்டம் உருவாக்கும். தற்போது இந்தத் திட்டத்தை எதிர்ப் பவர்கள் அப்போது அரசாங்கத்துக்குநன்றிசெலுத்துவார்கள். மின்சாரமானது - இன்று ஒவ்வொரு வருக்கும் அவசியமானது.

சிறு நீர்மின் திட்டங்களை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் நுரைச்சோலை திட்டத்தின் மூலம் 900 மெகாவோட் மின்சாரம் கிடைக்கும்.

இந்தத் திட்டமானது - முதலில் திருகோணமலையிலும் அதன் பின்னர் மாவெலவிலும் அமைக்கப்படுவதாக இருந்தது. இறுதியில் நுரைச்சோலையில் அமைக்க முடிவு செய்யப்பட்டது. கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்னரே இந்தத் திட்டத்துக்கான இடம் தெரிவுசெய்யப்பட்டது. ஆனால், தேச நலனை விட மலிவான அரசியல் லாபங்களுக்கு முன்னுரிமை கொடுப்போரால் இது தாமதமானது. அரசியல் லாபங்களைவிட மக்களுக்கான பயன்களை எண்ணிப் பார்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஊடகங்கள் செயற்படுகின்றனவாம்

### என்கிறார் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர்

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஊடகங்கள் செய்திகளை வெளியிடுவதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேனார்ட் குணதிலக குற்றம்சாட்டியுள்ளார்.

வொஷிங்ரன் ரைம்ஸ் நாளிதழுக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கொழும்பு இராணுவ மருத்துவ மனையில் தற்கொலைகுண்டுதாரி மூலம் தாக்குதல் நடத்தி கடைசி முறையாக விடுதலைப் புலிகள் அரசாங்கத்தை ஆத்திரமூட்டினார்கள்.

இதற்குப் பதிலடி கொடுப்பதற்காக கடற்படை மற்றும் விமானப் படையினர் திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தினர்.

ஆனால், அரசாங்கம் மீது குற்றம் சாட்டிய புலிகளின் கருத்துக்களையே ஊடகங்கள் முழுமையாக வெளியிட்டன. அவர்களது பரப்புரை இயந்திரம் நல்ல முறையில் இயங்கிவிட்டது. விடுதலைப் புலிகளின் இனப்படுகொலை என்ற சொற்றொடரைக் கூடப் பயன்படுத்தினார்கள்.

இராணுவ நடவடிக்கை தொடர்பான விடுதலைப் புலிகளின் கருத்தை வெளியிட்ட ஊடகங்கள் - கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் கருத்துக்கு அதே முக்கியத்துவம் அளிக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் மற்றும் நிலைகள் மீது தான் தாக்குதல் நடத்தப்பட்டன என்று ஹென்றிக்சன் தெரிவித்திருந்தார்.

திருமலையில் 10 முதல் 12 பேர் வரையிலானோர் கொல்லப்பட்டனர். அதே எண்ணிக்கையில் ஏப்ரல் 25 ஆம் திகதி கொழும்பு குண்டுத் தாக்குதலிலும் கொல்லப்பட்டனர்.

இனப்பிரச்சினைக்குத் நிரந்தர தீர்வு காண்பதைத் தவிர்ப்பதற்காக இறுதிநேர காரணங்களை விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்.

இது பயனற்றதுதான். ஆனால், இத்தகைய குழுக்களைக் கையாளும்போது பொறுமையாக இருக்க வேண்டியுள்ளது. முழு அளவிலான யுத்தத்துக்குச் செல்வதைத் தவிர்க்க அரசாங்கம் விரும்புகிறது. அந்தப் பாதையில் மீண்டும் சென்றால் அது என்ன விலை என்பதை நாங்கள் அறிவோம் எனத் தெரிவித்தார்.

## தமிழர்களின் படுகொலையுடன் இராணுவத்தினருக்கு தொடர்பு!

### கண்காணிப்புக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு —

அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதில் இராணுவத்தினருக்குத் தொடர்பு உண்டு என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட கண்காணிப்புக் குழு அதிகாரி ஜோன் சுனினென் தெரிவித்தார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு சுனினென் வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்கள் மீதான படு கொலையில் அரச படையினருக்குத் தொடர்பு இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட விதம் அனைத்தும் இதைத் தெளிவுபடுத்துகிறது.

இராணுவ சோதனைச்சாவடி அருகே 60 மீற்றர் தொலைவில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார். ஆனால், படைத்தரப்பினரோ தங்களுக்கு எதுவும் தெரியாது என்கின்றனர்.

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் கடந்த மாதம் மட்டும் 40 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால், வழமை போல் இராணுவம் இதனை மறுத்துள்ளது.

இந்தப் படுகொலைகளில் இராணுவத்தினருக்கு எந்தவித தொடர்பும் இல்லை. எமது இராணுவத்தினர் கட்டுப்பாடானவர்கள் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இராணுவத்தின் படுகொலை தொடர்பாக கண்காணிப்புக் குழு முதல் முறையாகப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இதைத் தவிர தங்களுக்கு வேறு வழி ஏதும் இல்லை என்றும் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

## கொழும்பு - கட்டுநாயக்க இடையே கட்டண நெடுஞ்சாலை அமைப்பு

கொழும்பு —

கொழும்புக்கும் சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள கட்டுநாயக்காவுக்கும் இடையே இலங்கையின் முதலாவது கட்டண நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது.

கொழும்பில் அமைச்சரவை முடிவுகள் குறித்து கடந்த புதன்கிழமை ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா கூறியதாவது -

இலங்கையின் முதலாவது கட்டண நெடுஞ்சாலையானது கொழும்பு நகருக்கும், கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கும் இடையே அமைக்கப்படவுள்ளது.

மொத்தம் 25.6 கிலோ மீற்றர் நீளம் அமைக்கப்படும் இந்த நெடுஞ்சாலை 39 மாதங்களில் உருவாக்கப்படும்.

மோட்டார்சைக்கிளில் செல்வோருக்கும் ஒரு குறிப்பிட்ட கட்டணம் வசூலிக்கப்படும்.

இந்தக் கட்டணமானது - நெடுஞ்சாலையின் பராமரிப்புக்குச் செலவிடப்படும்.

இந்த நெடுஞ்சாலை சீனாவின் 292 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியுடன் உருவாக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து பேலியகொட வரை ஆறு வழிப்பாதையாகவும் பேலியகொடவிலிருந்து கட்டுநாயக்காவரை நான்கு வழிப்பாதையாகவும் இது அமைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## அரசசார்பற்ற பணியாளர்கள்போல் தாக்குதல் நடத்துவதற்கு திட்டமாம்

கொழும்பு —

அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் போன்று ஆடைகள் அணிந்து, படைமுகாம்கள் மற்றும் படை அதிகா ரிகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும், எனவே இவ்வாறான ஆடைகளை அணிந்துள்ளோர் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு படை அதிகாரிகளுக்கு அறிவு றுத்தப் பட்டுள்ளதாகக் கிழக்கு மாகா ணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினர், அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் அணியும் சேட்டுக்களை அணிந்து கொண்டு கிழக்கு மாகாணத்தில் பலதாக்குதல்களை நடத்தியதாகக் கிடைத்த தகவல்கள் தொடர்பாக படையினரின் கவனம் திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## வெசாக் பண்டிகையை முன்னிட்டு திருமலையில் ஹர்த்தால் நிறுத்தம்

திருகோணமலை —

திருகோணமலையில் மூன்று தினங்கள் நடைபெறவிருந்த ஹர்த்தால் சிங்கள மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து நேற்றுமுன்தினம் மாலையுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் திருகோணமலை மாவட்ட பொங்கு தமிழ் சமூகம் தெரிவித்துள்ளது.

அப்பாவித் தமிழ் மக்கள்மீது இராணுவத்தினரும், துணை ஆயுதக் குழுக்களும் நடத்திவரும் திட்டமிட்ட படுகொலைகளைக் கண்டித்தும், இந்தப் படுகொலைகளை உடன் நிறுத்துமாறு அரசாங்கத்துக்கு வலியுறுத்தியும் நேற்று முன்தினம் முதல் மூன்று தினங்கள் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு திருகோணமலை பொங்கு தமிழ் சமூகம் அழைப்பு விடுத்திருந்தது.

இதனை அடுத்து நேற்று முன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் திருகோணமலை மாவட்டத்தின் இயல்புநிலை முற்றாக பாதிக்கப்பட்டது. இதனால் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்ட தனால் அங்கு பெரும் பதற்றநிலை உருவாகி யது. மக்கள் நடமாட்ட மின்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதனால் அச்சமடைந்த சிங்கள மக்கள் - நேற்றும் இன்றும் வொசாக் தினம் அனுட்டிக்க இருப்பதனால் சிங்கள மக்கள் பதற்றமின்றி மதவழிபாடுகளில் ஈடுபடுவதற்காக ஹர்தாலை நிறுத்துமாறும், இந்துப் பெருநாட்களில் தாம் ஹர்தாலை அனுஷ்டிக்கமாட்டோம் என சுமேதகம மற்றும் விஜித புர கிராம மக்கள் சகவாழ்வு மன்றத்தின் ஊடாக திரு கோணமலை பொங்கு தமிழ் சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதையடுத்து ஹர்த்தாலை நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் நிறுத்துவதற்கு தாம் முடிவு செய் துள்ளதாகப் பொங்கு தமிழ் சமூகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(10,4)

## அகாஷி, சொல்ஹெய்மை வெளியேற்ற வேண்டுமாம்

### ஸ்பர் அமைப்பு கோரிக்கை

கொழும்பு —

இலங்கை சமாதான அமைதி முயற் சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூஷி அகாஷி இருவரையும் சமாதான முயற்சிகளிலிருந்து வெளியேற்ற வேண்டுமென ஸ்பர் என்ற அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அவுஸ்ரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கையின் ஐக்கிய அமைதி மற்றும் மனித உரிமைகளுக்கான சமூகம் என்ற ஸ்பர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் -

ஜப்பான் மற்றும் நோர்வே விசேட பிரதிநிதிகளை அமைதி முயற்சிகளிலிருந்து வெளியேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அகாஷியை அந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்க ஜப்பானிய அரசாங்கத்துக்கு இலங்கை அரசாங்கம் வேண்டுகோள் விடுக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளின் அழுத்தங்களால் போர்நிறுத்த ஒப்பந்த மீறல் குறித்துத் தவறான தரவுகளை அகாஷி தெரிவித்துள்ளார்.

அமைதி முயற்சிகளில் கடந்த காலங்களில் இருவரது செயற்பாடுகளும் தோல்வியடைந்திருக்கின்றன.

இத்தகைய தோல்வியைத் தழுவும் இராஜதந்திரிகளுக்கு இலங்கை அரசாங்கம் சிவப்புக் கம்பளம் விரிக்கக்கூடாது. இவர்களுக்காகத் தொகையையும் செலவிடக் கூடாது.

படையினர் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை தமிழீழ விடுதலைப்புலிகள் உடனடியாக நிறுத்தாவிட்டால், போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அரசாங்கம் விலகிக் கொள்ளவேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றில்

கொழும்பு —

பயங்கரவாதத்தால் தோற்றுவிக்கப்பட்டுள்ள சவாலை வெற்றி கொள்வதற்கு யுத்த மற்றும் அனைத்து விதமாகவும் நிறுவன முறைகளை பலப்படுத்தவுள்ளதாகத் தெரிவித்து அரசு நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கவுள்ள சட்டமூல வரைபுப் பிரதி தற்பொழுது சட்டமா அதிபர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதன்படி யுத்த நிலைமையின் கீழ் ஊடக மற்றும் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய பொதுச்சட்டத்தின் கீழுள்ள உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டு வருவதுடன், 18 வயதுக்கு மேற்பட்ட 55 வயதுக்குட்பட்ட அனைத்துப் பிரஜைகளும் எந்த வேளையும் கட்டாய யுத்த சேவைக்காக அழைக்கப்படுவர்.

நாடாளுமன்றில் அரசு சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த சட்டவரைபு பிரதி அமெரிக்காவின் நாட்டுப்பற்று சட்டத்துக்குச் சமமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் விதமாக ஊடக சுதந்திரத்துக்கும் கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட சட்ட மூலவரைபு பிரதி தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டமா திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தே)

# தமிழ் மக்கள் போர்ச்சூழலுக்குள் சிக்கிய நிலையே காணப்படுகிறது

## மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன்

கிளிநொச்சி—

தற்போது வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களைப் பார்க்கும்போது சமாதானச் சூழல் செயலிழந்து தமிழ் மக்கள் போர்ச் சூழலுக்குத் தள்ளப்பட்டுவிட்டதையே காட்டுகின்றதென, மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கும், மாவட்ட அரசியற்துறையினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது கடந்த சிலநாட்களாக மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடைபெற்று வரும் ஆழஊடுருவித் தாக்கும் படையினரின் நடவடிக்கை குறித்து போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு எடுத்துக் கூறியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


மன்னாரில் கடந்த ஒருமாதகாலப் பகுதிக்குள் படையினரால் நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல் சம்பவங்களின்போது எட்டுப் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

முள்ளிக்குளம் பகுதியில் நடைபெற்ற இரண்டு சம்பவங்களில் இரு இளம் குடும்பப்பெண்கள் கொல்லப்பட்டனர். மடுத் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 5 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன், 4 பேர் காயமடைந்தனர்.

அரச படைகள் தமிழ்மக்கள் மீது திட்டமிட்ட இன அழிப்பை நடத்தி வருகின்றனர். இந்த நிலைமை தொடர்ந்து செல்லுமானால் தமிழ் மக்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் எனத் தெரிவித்தார்.

இத்தகைய சம்பவங்கள் போர் நிறுத்த மீறல் சம்பவங்களாகும். இதனை கண்காணிப்புக் குழவினரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரணைமடு கனகாம்பிகை தேர்த்திருவிழா உற்சவம்!



கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்புற நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டிருக்க நடைபெற்ற இந்தத் தேர்த்திருவிழாவின் போது - பக்தர்கள் பறவைக்காவடிகளோடு தமது நேர்த்தியை நிறைவு செய்தனர்.

கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த மகோற்சவம் - இன்று பூங்காவன நிகழ்வோடு நிறைவடையவுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்த்திருவிழாவுக்கு வன்னிப் பெருநிலப்பரப்பின் பல பாகங்களிலும் இருந்து பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# தர்மபுரம் - விசுவமடு பகுதிகளில் மூன்று சிறுவர்கள் உயிரிழப்பு!

வட்டக்கச்சி—

தர்மபுரம் மற்றும் விசுவமடு றெட்பானா ஆகிய இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் மூன்று சிறுவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

விசுவமடு றெட்பானா கிராமத்தில் கடந்த 26ஆம் திகதி கறுப்பையா தர்சினி (வயது04) என்ற சிறுமி விளையாடிக் கொண்டிருந்தபோது அருகிலுள்ள கிணற்றில் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அதேபோன்று தர்மபுரம் உழவனூர் கிராமத்தில் தம்பிராசபுரம் எனுமிடத்தில் சிறுவர்கள் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த வேளை ஊஞ்சலில் சிக்குண்டு ரகுராசன் நிதர்சன் என்ற சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

விசுவமடு கண்ணகிநகர் கிராமத்தில் தாயர் சமையல் பணியில் ஈடுபட்டிருந்தவேளை, அயல் வீட்டுக்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருந்த அஜந்தா (வயது05) என்ற சிறுமி அருகிலிருந்த கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்தார்.

இதேவேளை, பிரமந்தனாறு 40 ஆம் வாய்க்காலில் வசிக்கும் மற்றொரு சிறுவனும் பாட்டி நித்திரையில் இருந்தபோது கிணற்றின் கப்பியில் சிக்கிய வாளியை எடுப்பதற்காக மேலே ஏறியபோது கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த போதிலும் அவர் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டார்.

(09)

# மன்னார் - தாராபுரத்தில் பலநோக்கு மண்டபம் திறப்பு

மன்னார்—

நியாப் திட்டம் II இன் கீழ் மன்னார் தாராபுரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு மண்டபத்தை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.நீக்கிலாஸ்பிள்ளை கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் திறந்துவைத்தார்.

மன்னார் பிரதேச செயலர் ஏ. ஸ்டன்சி டிமெல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ்.யூ. சந்திரக்குமாரன், மற்றும் திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

நியாப் திட்டத்தின் 11 ஆம் கட்டத்தின் கீழ், சுமார் பத்து மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் முதற்கட்டமாக 12 லட்சம் ரூபா செலவில் குறித்த பலநோக்கு மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்த இரண்டாம் கட்டத்தின்மூலம், தாராபுரம் கிராமத்துக்கு வீதி, கிணறு, குளம் என்பன புனரமைக்கப்படவுள்ளதுடன், நீர் விநியோகத்திட்டமும் விருத்தி செய்யப்படவுள்ளது.

இதனுடன் மகளிர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் மகளிரின் சுயதொழிலுக்கென சுழற்சிமுறையில் பணம் வழங்கப்படவுள்ளதாகவும் நியாப்திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

(மோ)

# நடமாடும் பிரிவினரால் 3461 பேருக்கு சிகிச்சை

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் சிகிச்சைப் பிரிவினரால் கடந்த மாதம் 3 ஆயிரத்து 461 நோயாளர் களுக்கு சிகிச்சை அளித்துள்ளனர்.

இவ்வாறு சிகிச்சை அளிக்கப்பட்டவர்களில் ஆயிரத்து 484 பேர் வைரஸ் காய்ச்சலுக்கும், சுவாசத் தொற்றுக்கும் உட்பட்டிருந்தனர். இவர்களில் 80 வீதமானோர் சிறுவர்களாவர்.

அத்துடன், வைரஸ் காய்ச்சலும், சுவாசத்தொற்றும், வழமைக்கு மாறாக கடந்த மாதம் அதிகரித்துள்ளது.

தனிநபர் சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதனாலும், பாதுகாப்பான குடிநீர் பாவனை செய்வதனாலும், கோடைகால நோய்களான தோல் தொற்றுக்கள், வயிற்றோட்ட நோய், நெருப்புக் காய்ச்சல், போன்ற நோய்களிலிருந்து தற்காத்துக் கொள்ளுமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க களஞ்சிய அறை திறந்து வைப்பு!

இராமநாதபுரம்—

கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட களஞ்சிய அறையை கடந்த மூன்றாம் திகதி பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் திறந்து வைத்தார்.

சங்கத் தலைவர் இ.பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தேசியக் கொடியை வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திருமாறனும், மங்கள விளக்கை கரைச்சி பிரதேச விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம், அரச அதிபர் தி.இரசநாயகம் ஆகியோரும் கூட்டுறவுக் கொடியை கூட்டுறவு உதவி ஆணையாளர் சோ.குமாரவேலுவும் ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வில் அரச அதிபர், கரைச்சி பிரதேச விசேட ஆணையாளர், கூட்டுறவு உதவி ஆணையாளர் உட்படப் பலர் உரையாற்றினர்.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், கிராம சேவையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (இ)

# சேதமடைந்த பாலம்; மக்கள் பெரும் சிரமம்!



கிளிநொச்சி—

கிளிநொச்சி - கணேசபுரம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியில் உள்ள பாலம் புனரமைக்கப்படாமையால் அந்த வழியால் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கரடிப்போக்குச் சந்தியில் இருந்து கணேசபுரம் செல்லும் வீதியில்லுள்ள இந்தப் பாலம் “சத்ஜெய” இராணுவ நடவடிக்கையின் போது படையினரால் முற்றாக அழிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த கிராம மக்களால் இந்தப் பாலம் தற்காலிகமாகப் புனரமைப்புச் செய்யப்பட்டபோதும், இதனூடாக சைக்கிள், மோட்டார்சைக்கிள், மட்டுமே செல்லக்கூடியதாக உள்ளது. பூரண புனரமைப்பு மேற்கொள்ளப்படாத இந்தப் பாலத்தால் விவசாயக்கிராமமான கணேசபுரத்துக்கு உழவு இயந்திரம் போன்றவற்றைக் கொண்டு செல்ல முடியாமல் மக்கள் அன்றாடம் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

## முக்கிய கலந்துரையாடல்

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி அரசியற்துறை செயலகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முக்கிய கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால், துப்பாக்கி வைத்திருந்தோர், வைத்துள்ளோர் மற்றும் வேட்டைக்குச் செல்பவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வட்டக்கச்சிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## காவல்துறையினரால் தண்டப்பணம் அறவீடு

இராமநாதபுரம்—

வட்டக்கச்சி பிரதேசத்தில் மது போதையில் வாகனம் செலுத்துவோர், உழவு இயந்திரத்தில் அளவுக்கதிகமாகப் பொருட்களை ஏற்றிச் செல்வோர், மற்றும் உழவு இயந்திரத்தில் இரண்டு பக்கங்களிலும் (மக்காட்) பயணிப்போர் மீது பிரதேச காவல்துறையினர் தண்டப்பணம் அறவிட்டு வருகின்றனர்.

அத்துடன் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்துவோர் தடுத்து வைக்கப்பட்டு, அவர்கள் சுயநினைவுக்கு வந்தபின்னரே செல்ல அனுமதிக்கப்படுவதாகவும் காவல்துறைத் தகவல்கள் தெரிவித்தன. (இ)

# வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கான ஆரம்ப கட்ட கலந்துரையாடல்!

வட்டக்கச்சி—

உலகவங்கியின் நிதியுதவியுடன் கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள இரண்டாம் கட்ட வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான ஆரம்ப கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை என இருதினங்களாக நடத்தப்பட்டது.

இதன்படி, கடந்த திங்கட்கிழமை காலை 9.15 மணியளவில் கிராம சேவையாளர் சி.சிவனேசன் தலைமையில் சோலைநகர் கிராம பொது நோக்கு மண்டபத்திலும், பிற்பகல் 2.15 மணியளவில் கரைச்சி பிரதேச செயலர் க.சுலோஜினி தலைமையில் கரைச்சி பிரதேச செயலகத்திலும் முதல் நாள் கலந்துரையாடல் நடைபெற்றது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் நேரப் திட்டத்தின் மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல்களில் வீடமைப்புக்கான நடைமுறை ஒழுங்குகள், அவற்றின் செயற்பாடுகளை எவ்வாறு முழுமையாக முன்னெடுப்பது என்பது குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (09)

# பயிற்சி உபகரணங்கள் வழங்கல்

வடமராட்சி—

வடமராட்சி கிழக்கில் தொழில் பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்களுக்கு பயிற்சி உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

மருதங்கேணி தொழிற்பயிற்சி நிலையத்தில் றீடோ நிறுவன திட்ட இணைப்பாளர் கனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - நிகழ்வுச் சுடர் ஏற்றப்பட்டது. தமிழீழ தேசியக் கொடியை வடமராட்சி கிழக்கு மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழன்பன் ஏற்றினார்.

பயிற்சியை நிறைவு செய்த 25 மாணவர்களுக்கு தையல் இயந்திரமும், 25 மாணவர்களுக்கு படகு வெளியிணைப்பு இயந்திரத்தின் பயிற்சி உபகரணங்களும் வூஸ் நிறுவன நிதி உதவியுடன், றீடோ நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

# படையினரின் சோதனைகளால் மக்கள் மத்தியில் அச்சநிலை

யாழ்ப்பாணம் ——

யாழ். குடாநாட்டில் கடந்த சில நாட்களாகப் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் மத்தியில் அச்சநிலை தோன்றியுள்ளது.

இராணுவக் காவலரண்கள், படைமுகாம்கள் உள்ள இடங்களிலும் மற்றும் முக்கிய சந்திகளிலும் பெருமளவான படையினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபடுவதால், அவசர தேவைகளுக்காகச் செல்வோர் அன்றாட தேவைகளை நிறைவேற்ற முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது.

மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களில் பயணம் செய்வோர்களைச் சந்திக்குச் சந்தி தடுத்து வைத்துச் சோதனை செய்வதுடன், வாகனங்களின் ஒவ்வொரு பாகங்களையும் கழற்றிச் சோதனையிடும் படையினர் - இளைஞர்கள் மட்டுமன்றி யுவதிகள், வயோதிபர்கள் என வயது வேறுபாடின்றி சோதனைக்குட்படுத்தி வருவதனால், பல சிரமங்களை எதிர்நோக்கியே மக்கள் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நீர்வேலி, இருபாலை போன்ற பகுதிகளில் போக்குவரத்தில் ஈடுபட்ட அரச - தனியார் வாகனங்களில் பயணம் செய்தபயணிகளை இறக்கிச் சோதனை மேற்கொண்ட படையினர் வாகனங்களின் இருக்கைகளையும் கழற்றிச் சோதனை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளாந்தம் அதிகரித்துவரும் சோதனைக் கெடுபிடிகளால் போக்குவரத்தில் ஈடுபடும் மக்களின் தொகை குறைவடைந்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை, படையினர் மீது நடத்தப்பட்டு வருகின்ற திடீர் தாக்குதல் சம்பவங்களையடுத்து அந்தப் பிரதேசத்தில் பயணம் செய்வோர் மிகவும் மோசமான முறையில் தாக்கிக் காயப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(113 -82)



கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் பெண்களுக்கான 4 நாள் பயிற்சி ஐக்கிய நாடுகள் (F.A.O) அனுசரணையுடன் நடைபெற்றபோது உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை மற்றும் விரிவுரையாளர்களுடன் பயிற்சியாளர்களைப் படத்தில் காணலாம். (206)

# கடற்படையினரின் கெடுபிடியால் நீண்ட தூரம் நடக்கும் பயணிகள்

வேலணை ——

குறிகட்டுவான் துறைமுக வீதியூடாகப் பயணிகள் பஸ்ஸில் செல்வதற்குக் கடற்படையினர் சிலவேளைகளில் அனுமதி வழங்க மறுத்து வருவதால், பொதுமக்கள் கால் நடையாக நீண்டதூரம் செல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவு, நயினாதீவு உட்பட தீவுப்பகுதிகளுக்கான பிரதான போக்குவரத்துத் துறைமுகமாக விளங்கி வரும் குறிகட்டுவான் துறைமுகத்துக்குப் பயணிகள் வாகனங்கள் செல்வதற்குச் சிலவேளைகளில் படையினர் அனுமதி மறுப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் பொதுமக்கள் தமது மூட்டை முடிச்சுக்களுடன் நீண்டதூரம் நடந்து சென்றே பயணத்தைத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

துறைமுகத்தில் கடமையாற்றும் கடற்படையினர் தமது இஷ்டப்படி பொதுமக்களை நடக்க நிர்ப்பந்திப்பதால், தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவித்தார். (113)

# தொடர்பு கொள்ள கோரிக்கை

சாவகச்சேரி ——

தென்மராட்சி - சரசாலை பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நேரம் சனி, ஞாயிறு தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் ஆர்வமுள்ள சிறுவர்களும், ஆசிரியர்களும் நூலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் கேட்டுள்ளார். (29)

# அலங்கார உற்சவம்

தும்பளை ——

தும்பளை இலட்சுமணன் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ வீரகாளியம்மன் வடபத்திரகாளியம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரமபமாகிறது.

இன்று மாலை 3.30 மணியளவில் ஆரம்பமாகி வெகு விமரிசையாக 27 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

# குமுதினிப் படுகொலையின் 21வது ஆண்டு நினைவுதினம்

நெடுந்தீவு ——

குமுதினிப் படகு படுகொலையின் 21 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் நெடுந்தீவில் மிகவும் உணர்ச்சிபூர்வமான முறையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நெடுந்தீவு மக்கள் ஒன்றிணைந்து குறித்த தினத்தன்று காலை 7 மணிக்கு மாவிலித்துறைமுகத்தில் உள்ள படுகொலை செய்யப்பட்டவர்களது நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலய வளாகத்தில் அஞ்சலி நிகழ்வுகளை நடத்தவுள்ளதுடன், அந்தப் பகுதியிலேயே ஆத்ம சாந்தி வேண்டி நெடுந்தீவுப் பங்குத்தந்தையால் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

தொடர்ந்து 9 மணிக்கு நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை ஆலயத்திலும், பகல் 12 மணிக்கு நெடுந்தீவு மேற்கு நெழுவினிப் பிள்ளையார் ஆலயத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளன.

1985 ஆம் ஆண்டு நெடுந்தீவிலிருந்து தமது அன்றாடப் பணிகளுக்காக குமுதினிப் படகில் பயணித்த சுமார் 36 அப்பாவிப் பொதுமக்கள் நடுக்கடலில் வைத்து படுகொலை செய்யப்பட்டமை நினைவுகூரத்தக்கதாகும்.

# மாவிலித்துறை ஆழமாக்கப்படாமையால் படகுச் சேவை இடம்பெறுவதில் சிரமம்



நெடுந்தீவு ——

நெடுந்தீவு மாவிலித்துறைமுகப் பகுதி ஆழமாக்கப்படாமையால் தற்போதுள்ள பருவக்காற்று மாற்றத்தால் நீர்வற்றி படகுகள் தரைதட்டும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் படகு சேவைகள் சீராக இடம்பெறுவதில் சிரமங்கள் ஏற்படுகிறது.

இதேவேளை, கடற்பகுதி தரை போலக் காட்சியளிப்பதால் நெடுந்தீவுக்கென தற்போது வழங்கப்பட்டுள்ள புதிய அம்புலன்ஸ் படகை அவசர தேவைகளுக்கென காலை நேரத்தில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அரச அதிகாரிகளின் கவனத்துக்கு நெடுந்தீவுப் பிரதிநிதிகளால் பல தடவைகள் எடுத்துக்கூறப்பட்டபோதும், இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டும் இன்றுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் படாமை குறிப்பிடத்தக்கது.

(113)

# இரவுநேர திடீர் மின்வெட்டால் பாவனையாளர், மாணவர் அவதி

யாழ்ப்பாணம் ——

யாழ். குடாநாட்டில் திடீர் திடீரென மேற்கொள்ளப்படும் இரவுநேர மின்வெட்டால் பாவனையாளர்கள் மற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தத் திடீர் மின்வெட்டு குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெற்று வருவதாகப் பாவனையாளர்கள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இரவுநேரத்தில் யாழ். நகரின் சில பகுதிகள், நல்லூர், சாவகச்சேரி, இணுவில் ஆகிய பகுதிகளில் முன்னறிவிப்பு ஏதுமின்றி மின்வெட்டு நடைபெறுவதாக இந்தப் பகுதி மக் கள் தெரிவித்தனர்.

அண்மையில் ஏ-9 வீதி திடீரென மூடப்பட்டதை அடுத்து - எரிபொருள் பற்றாக்குறையால் குடாநாட்டில் பாரியளவு மின்வெட்டு மேற்கொள்ளப்பட்டது. பின்னர் பாதை மீண்டும் திறக்கப்பட்டதையடுத்து மின் விநியோகம் வழமைக்குத் திரும்பியபோதும், இவ்வாறு மின்வெட்டு மேற்கொள்வது குறித்துப் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மின்சாரசபையிடம் தொடர்புகொண்டபோது - தற்போது மின் விநியோகம் இடம்பெறுவதாகவும்முன்புகுடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படுவதுபோன்று குறிப்பிட்ட நேர சுழற்சி முறையிலான மின்வெட்டே இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் குடாநாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் வழமைக்கு மாறாக இரவு நேரங்களில் மணித்தியாலக் கணக்கில் மின்வெட்டு இடம்பெறுகிறது. இதனால் பாவனையாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக உயர்தர பரீட்சை ஆரம்பமாக இருக்கும் இந்த நேரத்தில் இவ்வாறு இரவு நேரத்தில் நீண்டநேரம் மின்வெட்டு மேற்கொள்ளப்படுவதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைகிறது. அத்துடன், நீண்டநேர மின்வெட்டால் திருட்டுச்சம்பவங்கள் ஏற்பட வாய்ப்பாக அமைவதாகவும் பாவனையாளர்கள் தெரிவித்தனர். (ரி)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை எட்டு



பெயர் : ஜெ.தனுசிகா
முகவரி : வட்டக்கச்சி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :

முகவரி

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# உயர்தரப் பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம் ——

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கடமையாற்றவுள்ள இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள் அனைவருக்கும் இன்று காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாணம், தீவகம் மற்றும் தென்மராட்சி வலயங்களில் நிறுவப்பட்டுள்ள இணைப்பு நிலையங்களிலும், பரீட்சை நிலையங்களிலும் கடமையாற்றவுள்ள மேற்படி அலுவலர்களை இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

# பாடசாலையை இயக்க கோரிக்கை

யாழ்ப்பாணம் ——

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்து நீண்ட காலமாக இயங்காமலிருக்கும் மண்டைதீவு கார்த்திகேசு மகாவித்தியாலயத்தை மீண்டும் இயங்க வைக்குமாறு தீவக வலய கல்விப் பணிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையைப் பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கல்விப் பணிப்பாளரிடம் விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள ஏனைய இரு அரசினர் பாடசாலைகளும் மீள இயங்க ஆரம்பித்துள்ள நிலையில் - குறித்த பாடசாலை மட்டும் இயங்காமல் உள்ளது எனவும் கல்விப் பணிப்பாளரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நல்லின விதைநெல் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் ——

யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளும் நெற்செய்கையாளர்களுக்கு நல்லின விதை நெல்லை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கமநல திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

நெற்பயிர் செய்கையாளர்களுக்கு வவுனியா விதை நெல் உற்பத்தி களஞ்சியத்திலிருந்து ஏரி -402, ஏரி 351, வி.டபிள்யூ 361 ஆகிய இனத்தைச் சேர்ந்த விதை நெல்லினங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், தேவையான விவசாயிகள் கமநலசேவை நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறும், 300 ரூபாவை முற்பணமாகச் செலுத்தி பதிவுசெய்து கொள்ளும்படியும் கமநலத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

# தென்னைச் செய்கைக்காக மானிய உதவித் திட்டம்

யாழ்ப்பாணம் ——

யாழ். மாவட்டத்தில் தென்னை பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கு தென்னை செய்கையாளர்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்னை மீள் நடுகை, கிளிசெறியா ஊடுபயிர் நாட்டல், பொச்சு மட்டை குழி ஆகிய செயற்திட்டங்களின் கீழ் தென்னைச் செய்கையாளர்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தென்னைச் செய்கையில் ஈடுபடுவோர் - கமநலசேவை திணைக்களத்துடன் தொடர்புகொண்டு மானிய உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாவட்ட கமநலசேவை உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி? 12.05.2006 - 18.05.2006

| | | | |
|---|---|---|---|
| சுக், ராகு | சூ<br>புத | | செவ் |
| யுரே | 13 - பி.ப 3 - 15 விரு - சந்<br>14 - பி.இ 3 - 10 இட - சூரி<br>15 - இ 9 - 44 தனு - சந்<br>17 - கா. 7 - 49 இட - புத<br>17 - பி.இ 2 - 21 மக - சந் | | சனி |
| நெப் | | | |
| | | சந்<br>குரு | கேது |

### மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு நிலவும். எனினும், சச்சரவுகளும் இடையிடையே இருந்துகொண்டிருக்கும். பணவருவாய் ஓரளவு சமாளிக்கக்கூடியதாக இருக்கும். எடுத்த காரியங்கள் தாமதத்தின் பின்பே நிறைவு பெறும். தேகசுகத்தைப் பேணிக் கொள்வது நன்று. விவாகம் முதலிய மங்கள கருமங்கள் தாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் கூடுதலாக இருந்தாலும் சக ஊழியர்களின் உதவியுடன் சமாளிக்க முடியும். பதவி உயர்வு என்பன தாமதமடையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமாகவே நடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப்புகள் மத்திமமாகவே இருக்கும். முயற்சிக்கேற்ப லாபமுண்டு. மாணவர்களுக்கு இருக்கும் முயற்சிக்கேற்ப லாபமுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் ஊக்கம் தேவை.

### இடபம்

கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 12 கால்கள்)



இடபராசியில் பிறந்தவர்களுக்கு மிக நல்ல பலன்கள் இந்த வாரம் நிகழும். குடும்பஸ்தர்களுக்கு இல்லறம் நல்லறமாக விளங்கும். திடீர் பண வருவாய் ஏற்படும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்க இடமுண்டு. புத்திரர்களாலும் உறவினர்களாலும் உதவி உண்டு. எடுத்த கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். விவாக மங்கள கருமங்கள் மனம்போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவம், மதிப்பு உயரும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். கீழ் உத்தியோகத்தர்கள் கௌரவமாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் அமோகமாக நடக்கும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு ஏற்ற காலம். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் இருந்து கொண்டிருக்கும். தொழில்மூலம் குறிப்பிடத்தக்க லாபமுண்டு. மாணவர்கள் கல்வியில் சிறப்புச் சித்திகள் பெறுவர்.

### மிதுனம்

மிருக சீரிடம் 3,4 திருவாதிரை புனர் பூசம் 1,2,3 கால்கள்)



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். உறவினர், நண்பர்களால் உதவி உண்டு. பொருளாதார நிலை திருப்தியாக இருக்கும். தேகசுகம் பாதிப்படையாது. விவாக கருமங்கள் விரைவில் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு பணிகள் சீராக நடக்கும். போக்குவரவுகளில் பிரச்சினை இருக்காது. சகஊழியர்களின் உதவி உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். நகைவியாபாரிகள் கூடுதல் லாபமடைவர். வாடிக்கையாளர்களின் வரவு அதிகமாகும். தொழிலாளர்களுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். ஒப்பந்தங்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு.

### கடகம்

(புனர் பூசம் 4, பூசம் ஆயிலியம்)



கடக ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதிக் குறைவும், சச்சரவுகளும் இருக்கும். எந்தக் கருமத்தையும் சாதிக்க முடியாமல் திண்டாடுவர். வருவாயிலும் பார்க்க செலவு மிதமிஞ்சி இருக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சக ஊழியர்களின் உதவி குறையும். அதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். நிதிப் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு குறையும். உழைப்புக்கேற்றலாபம் இருக்காது. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் கால்)



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் இடையிடையே கருத்து வேற்றுமை தோன்றும். புத்திரர்களால் அதிக லாபம் எதிர்பார்க்க முடியாது. வரவு செலவு சமமாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் கூடினாலும் சக உதவியுடன் செயற்பட முடியும். மேலதிகாரிகளின் போக்குக்கேற்ப நடந்து கொள்ளுதல் நன்மை பயக்கும். வியாபாரிகளுக்கு விற்பனை மத்திமமாக இருக்கும். வாடிக்கையாளர்களைக் கவரக் கூடிய வகையில் விளம்பரம் செய்வோர் கூடிய லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் ஓரளவு நன்று. உழைப்புக்கேற்ற லாபமுண்டு. மாணவர்களுக்கு கூடுதல் அக்கறை தேவை.

### கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2 கால்கள்)



கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக நடக்கும். புத்திரர்களால் உதவி உண்டு. பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். உறவினர்கள், நண்பர்களின் வரவால் மகிழ்ச்சி ஏற்படும். தேகசுகம் திருப்தியாக இருக்கும். குடும்பப் பெண்கள் சந்தோஷத்துடன் காணப்படுவர். மங்கள கருமங்கள் கைகூட வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் கௌரவம் அதிகரிக்கும். அதிகாரிகளின் அனுசரணை கிட்டும். பிரயாணங்களில் சிரமங்கள் இருக்காது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். லாபம் அதிகரிக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். வங்கி உதவிகளும் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் மூலம் நல்ல லாபம் கிட்டும். இயந்திரத் தொழிலாளர் அதிக லாபம் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பு சித்தி உண்டாகும்.

### துலாம்


(சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1,2,3 கால்கள்)



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் பல நற்பலன்கள் நிகழும். கணவன், மனைவியிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பாராதவாறு பண வருவாய் கிடைக்கும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடைபெறலாம். உறவினர் நண்பர்களின் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். தேகசுகம் சிறப்பாக இருக்கும். மங்கள கருமங்கள் மனம்போல் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு பணிகள் சிறப்பாக நடைபெறும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு வரும். வர்த்தகர்களுக்கு விற்பனை சிறப்பாக நடக்கும். முதலீடுகளில் நல்ல லாபம் உண்டு. புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப்புகள் கிடைத்துக்கொண்டிருக்கும். ஒப்பந்த வேலைகள் நல்ல லாபம் தரும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பும், சித்தியும் உண்டு.

### விருச்சிகம்

(விசாகம் 4, அனுசம், கேட்டை)



விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதியின்மையும், பிரச்சினைகளும் இருக்கும். புத்திரர்களால் தொல்லைகள் வரும். எடுக்கும் முயற்சிகள் கைகூடாது. வருவாய் குறையும். தேகசுகக் குறைவால் வைத்தியச் செலவு அதிகரிக்கும். விவாக கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு பலவித பிரச்சினைகள் தோன்றும். வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகளின் கெடுபிடிகள் கூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். நிதிப்பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். இயந்திரங்கள் ஒத்துழைக்காமல் தொல்லை கொடுக்கும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். பரீட்சைகள் திருப்தி தராது.

### தனுசு


(மூலம் பூராடம் உத்தராடம் 1 கால்)



தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு பல நற்பலன்கள் காட்டுகின்றன. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பணவருவாய் சிறப்பாக இருக்கும். உறவினர்களின் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து பண உதவி கிடைக்கும். விவாக கருமங்கள் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு மதிப்பு உயரும். அதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மிக நன்று. முதலீடுகள் விற்பனையாகி பணம் சேரும். வங்கி உதவிகளும் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். தொழில் மூலம் வருவாய் சிறக்கும். மாணவர்களுக்கு கல்வி சிறப்படையும். பரீட்சைகளில் சிறப்புச் சித்தி கிடைக்கும். சிலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கலாம்.

### மகரம்

உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 12 கால்கள்)



மகரராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை நன்றாக இருந்தாலும், இடையிடையே சச்சரவுகள் நிகழும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தைக் காட்டும். தொழிலில் பிரயாசைக் கேற்ற லாபம் கிடையாது. புத்திரர்களால் உதவி குறையும். .தேகசுகத்தைப் பேணிக் கொள்ள வேண்டும். மங்கள கருமங்கள் தாமதத்தைக் காட்டும். உத்தியோ கத்தர்களுக்கு பணிகள் நன்கு நடக்கும். வேலைப் பொறுப்புகள் அதிகமாகும். அதிகாரிகளின் போக்குக்கேற்ப நடந்து கொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். வாடிக்கையாளர்களின் வருகையால் ஓரளவு லாபம் உண்டு. தொழிலாளர்களுக்கு தொழில் சிறக்கும். தொழில் மூலம் வருவாய் ஓரளவு நன்றாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வி முயற்சிகளுக்கேற்ப சித்தி உண்டு.

### கும்பம்

(அவிட்டம் 3, 4 சதயம் பூரட்டாதி 1,2,3 கால்கள்)



கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக விளங்கும். பொருளாதார நிலை திருப்திதரக்கூடியதாக இருக்கும். இனசனக் கொண்டாட்டங்கள் நன்றாக நடக்கும். தேகசுகம் பாதிக்கப்படமாட்டாது. மங்கள கருமங்கள் கைகூடி மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவம், மதிப்பு உயரும். அதிகாரிகளின் அனுசரணை கிட்டும். சகஊழியர்கள் மரியாதையுடன் நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் திருப்தியாக நடைபெறும். அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் நன்று. வருமானம் கூடுதலாகக் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் நன்று. உயர்கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.

### மீனம்

(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நிம்மதிக் குறைவு இருந்து கொண்டிருக்கும். நிதிப் பற்றாக்குறை இருந்து கொண்டேயிருக்கும். செலவு ஸ்தானம் உயர்ச்சியடையும். சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும். உழைப்புக்கேற்ற வருமானம் கிடையாது. மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு பல பிரச்சினைகள் உருவாகும். போதுமான வருவாய் கிடையாது. ஊதிய உயர்வு தள்ளிப் போகும். வியாபாரிகள் முதலீடுகளை விற்க முடியாமல் கஷ்டப்படுவர். வாடிக்கையாளர்களின் வரவும் குறையும். புதிய முதலீடுகள் செய்ய நிதி இருக்காது. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். பிரயாசைக் கேற்ற லாபம் கிடையாது. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். பரீட்சை திருப்தி தராது.

## தேங்காய்களை களவாக பறித்து விற்கும் படையினர்!

சுதுமலை —

காக்கைதீவு தென்னந் தோட்டங்களில் இராணுவத்தினர் தேங்காய்களைப் பறித்து விற்பனை செய்து வருவதாக கிராம மக்கள் தெரிவித்தனர்

படையினர் ஆறுகால்மடம், பழம் வீதி, காக்கைதீவுப் பகுதிகளிலுள்ள தனியாருக்குச் சொந்தமான தென்னந் தோட்டங்களில் பெரும் எண்ணிக்கையில் தேங்காய்களைப் பறித்து அந்தப் பகுதி வர்த்தக நிலையங்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு தாம் முறையிட்ட போதும் இதுவரை தேங்காய் களவு நிறுத்தப்படவில்லையென காணி உரிமையாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

தோட்டங்களில்த வைத்து தேங்காயை உரித்து காக்கைதீவு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்வதால், தேங்காய் மட்டைகளை வைத்தே களவு போன தேங்காய்களை மதிப்பிட முடியாதாகவும், கடந்த வாரம் ஒரு தோட்டத்தில் மட்டும் 50 தேங்காய்களின் மட்டைகளை தாம் எடுத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை காக்கை தீவு கடற்தொழிலாளர்களிடம் தமது தேவைக்கென கடலுணவுவைப் பெறும் இராணுவத்தினர் அவற்றை நீண்ட காலமாக விற்பனை செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (91)

## ஆங்கில ஆசிரியர்களின்றி மாணவர் கல்வி பெரும்பாதிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் ஆங்கில மொழிமூல ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக மாணவர்களது ஆங்கிலக் கல்வி வளர்ச்சி பாதிப்படைவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டில் அனைத்து வலயங்களிலும் ஆங்கில மொழி மூல ஆசிரியர்களுக்கு இவ்வாறான தட்டுப்பாடுகள் நீண்ட காலமாக நிலவி வருகிறது. இவ்வாறான ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை குடாநாட்டில் கிராமிய பாடசாலைகளில் மட்டுமன்றி, நகரப் பாடசாலைகளிலும் நிலவி வருகிறது. இதனால் மாணவர்களது ஆங்கில கல்வி வளர்ச்சி வீழ்ச்சியடைந்து வருவதாக கல்வியியலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குடாநாட்டில் ஆங்கில ஆசிரியர்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டபோதும், அவர்களது பணியை உறுதிப்படுத்தும் வகையில் நிரந்தர நியமனம் வழங்குவதில் நிலவி வந்த காலதாமதத்தாலும், ஒப்பந்த ஆசிரியர்களது கல்விச் சேவையும் பாதிப்படைந்துள்ளது. குடாநாட்டில் உள்ள தனியார் கல்வி நிலையங்களிலும் கூட இவ்வாறு ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து தனியார் கல்வி நிலையங்களில் ஆங்கில பாடம் கற்க மாணவர்களிடம் அதிக தொகை அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பாடசாலைகளில் ஆங்கிலப் பாடம் கட்டாய பாடம் ஆக்கப்பட்டுள்ள நிலையில் - ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக தமது பிள்ளைகளின் ஆங்கில கல்வி குறித்து பெற்றோர்களும் கவலை கொண்டுள்ளனர்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.
- திருக்குறள்.

## நமது நோக்கு

# சீர் செய்யமுடியாத யுத்தநிறுத்தம்!

சிதைந்து போயிருக்கும் போர் நிறுத்த உடன்பாட்டை சீரமைக்கத் தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் - போரா? சமாதானமா? என்பதை அரசும், புலிகளும் தான் தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் இலங்கைக்கு வந்து இருதரப்புடனும் பேச்சு நடத்திய பின்னர் அவர் வெளியிட்ட கருத்துத் தான் இது. அதாவது, சீரழிந்து போயிருக்கும் போர் நிறுத்த உடன்பாட்டை வெளிநாடுகளால் சீரமைக்க முடியாது என்பதுதான் இதன் சாராம்சம்.

சர்வதேச சமூகத்தின் முன்பாக, அதன் அனுசரணையோடு செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாடு - இன்று அவர்களாலேயே சீரமைக்கப்பட முடியாமல் போனதற்கு காரணம் என்ன?

சர்வதேச சமூகத்தின் முன்பாக சம பல நிலையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை அதற்கேற்றவாறு நடைமுறைப்படுத்தப்படாமை, போர்நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்த அரச தரப்பு முன்வராமை ஆகியனதான் இன்றைய நெருக்கடிக்குக் காரணம்.

போர் நிறுத்தம் நடைமுறையில் இருக்கின்றபோதே தாக்குதல்கள் நடக்கின்றன. ஏராளமான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இராணுவ வன்முறைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன.

அர கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கண்காணிப்புக் குழுவின் முன்பாகவே நடைபெறுகின்ற இத்தகைய சம்பவங்கள் வெளியுலகத்துக்கு தெரியவருவதில்லை.

ஆனால், எங்கேயாவது ஒரு கடற் சண்டையோ, கிளைமோரோ வெடித்து விட்டால் மட்டும் கண்காணிப்புக்குழு அறிக்கைப் போர் நடத்திக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையும், அரச படைகள் தொடர்ந்து போர் நிறுத்த உடன்பாட்டை மதிக்கத் தவறியதாலும் தான் எவராலும் சீர்படுத்த முடியாத கட்டத்துக்குள் போர் நிறுத்த உடன்பாடு தள்ளப்பட்டு நிற்கிறது.

இந்தச் சூழலில் அகாஷி போன்ற சர்வதேச சமூகத்தினர் தம்மால் எதுவும் செய்ய முடியாது எனக் கை விரிப்பது அவர்களின் இயலாமையை வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்த இயலாமை எப்படி ஏற்பட்டது? கடந்த நான்கு வருட காலத்தில் போர் நிறுத்தத்தை முறையாகக் கடைப்பிடிக்கும்படி இவர்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தவறியதே இந்த நிலை ஏற்படக் காரணம்.

போர் நிறுத்த உடன்பாட்டை செம்மையாக அமுல்படுத்தவோ, பேச்சுக்களை முன்னெடுக்கவோ தவறிய இலங்கை அரசுக்கு - சர்வதேச சமூகம் கொடுத்த ஆதரவும், உதவியும்தான் இந்த தறிகெட்ட நிலைக்குக் காரணம் என்றால் மிகையில்லை.

இப்போது இரண்டு தரப்புக்குமே போர் நிறுத்தம் நம்பிக்கையற்ற ஆவணமாகிவிட்டது. இதை நடைமுறைப்படுத்தத் தவறியதால்தான் இந்த நிலை ஏற்பட்டதென்ற நிலையில் - தொடர்ந்தும் இதைப்பற்றிய பேச்சுக்களே முன்னெடுக்கப்படவேண்டும்.

ஆனால், துரதிஷ்டவசமாக, அரசு ஜெனிவாவில் போர் நிறுத்தம் குறித்து நடத்திய பேச்சுக்களின் போது எட்டிய உடன்பாட்டை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது. இதுதான் புலிகளுக்கு மேலும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிட்டது.

அதுபோதாதென்று தாம் கருணா குழுவை நிராயுதபாணிகளாக்குவது குறித்து ஜெனிவாவில் இணக்கம் காணவில்லை. அதைச் செய்ய முடியாததற்காக தம் மீது குற்றம் சாட்டவும் முடியாது என்று அரச சமாதான செயலக பணிப்பாளர் பாலித கொகன்ன கூறியிருந்தார்.

இவையெல்லாம் சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற நோக்கில் அரசு செயற்படவில்லை என்பதையே உறுதிப்படுத்துகிறது. எதிர்காலத்தில் சர்வதேசமும் கைவிட்ட நிலையில், போர் நிறுத்த உடன்பாடு நடைமுறைப்படுத்தப்படுவதென்பது வெறும் பேச்சளவிலேயே இருக்கப்போகிறது.

இதனால் யுத்தபீதி மேலோங்குவதை எவராலும் தடுக்கமுடியாது என்பதே யதார்த்தமாக உள்ளது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்

படுகொலைகளுக்கும், இராணு வத்தினருக்கும் எதுவித தொடர்பும் இல்லை. எமது இராணுவத்தினர் கட்டுப்பாடானவர்கள்.
-இராணுவப் பேச்சாளர்.




# தமிழக முதல்வராக கருணாநிதி இலங்கை கட்சிகளின் கருத்துகள்

கொழும்பு —

தமிழ்நாடு முதல்வராக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி இன்று மீண்டும் பதவியேற்கவுள்ளார். தமிழகத் தேர்தலில் கலைஞர் கருணாநிதி பெற்றுள்ள வெற்றி குறித்து இலங்கையிலுள்ள கட்சிகள் தெரிவித்துள்ள கருத்துக்களின் தொகுப்பு -

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் -**



தமிழ் நாட்டில் தி.மு.க வெற்றி பெற்றிருப்பதன் மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தில் அதனது செல்வாக்கு அதிகரித்துள்ளது. 1983 ஆம் ஆண்டு இலங்கையில் இன வன்முறைகள் வெடித்தபோது தமிழகத்திலிருந்து எமக்காகக் குரல் எழுப்பப்பட்டது. கலைஞர், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக இல்லாவிட்டாலும், தமிழர்களுக்கு எதிரானவர் அல்ல. இலங்கை ஊடகங்கள் இதைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளன எனத் தெரிவித்தார்.

**சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி -**

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஜெயலலிதா எதிரானவர். ஆனால், அவருடன் விடுதலைப் புலிகளைக் கடுமையாக ஆதரிக்கக்கூடிவர் களும் உள்ளனர்.

தமிழகத்தினது வாக்குப் பதிவு இலங்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.



**ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் -**

காங்கிரஸ் அரசாங்கத்துடன் கருணாநிதி இணைந் திருப்பதால் தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏதுவான சூழ்நிலை இல்லை. விடுதலைப் புலிகளைக் கடுமையாக ஆதரிக்கக்கூடிய வைகோ மற்றும் ஜெயலலிதா அணியினரைக் கருணாநிதி தோற்கடித்துள்ள புதிய அரசியல் சூழ்நிலை எமக்குச் சாதகமானது.



**கருஜயசூரிய - ஐ.தே.க பிரதித்தலைவர்**

தமிழகத் தேர்தல் நிலைமைகள் தொடர்பாக அவதானமாக கவனித்து வருகின்றோம். தற்போது கருத்துகள் தெரிவிப்பது சரியானது அல்ல.

# 2 மணிநேரத்துக்கு முன்னரே தற்கொலைதாரி இராணுவ தலைமையகத்துக்குச் சென்றாராம்

கொழும்பு —

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த பெண் தற்கொலையாளி இரண்டுமணி நேரத்துக்கு முன்னரேயே இராணுவத் தலைமையகத்துக்குள் உள்நுழைந்துள்ளாரென ரகசிய பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும், அவர் இராணுவத் தலைமையகத்துக்குள் சென்றமை தொடர்பாக முக்கியமான தகவல் எதுவும் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத் தலைமையகப் பகுதிக்குள் செல்லும் பிரதான வாயிலிலிருந்து, இராணுவ மருத்துவமனைவரை பயணிகள் போக்குவரத்துக்காகப் பஸ்சேவை நடைபெறுகிறது. பெண் தற்கொலையாளியும் குறித்த பஸ்ஸில் ஏறி இராணுவ மருத்துவமனைக்கு சென்றதை நேரடியாக கண்ட பலர் தற்போது இரகசிய பொலிஸாருக்கு இது குறித்து தெரிவித்துள்ளனர். அந்தக் சாட்சிகள் மற்றும் குண்டு வெடிப்பின் பின்னர் கிடைத்த தடயப் பொருட்களைப் பயன்படுத்தி குறித்த பெண்ணின் வர்ணப் புகைப் படமொன்றையும் ரகசியப் பொலிஸார் தற்போது உருவாக்கியுள்ளனர்.

குறித்த பெண் தற்கொலைதாரி இராணுவத் தளபதியை இலக்கு வைத்து குண்டை வெடிக்க வைக்கும் வரை, மருத்துவமனை சிகிச்சை நிலையப் பகுதியிலும், மருத்துவமனைக்கு வெளியே செல்லும் வாசலிலுள்ள அரிமர நிழலிலும் நீண்ட நேரம் நின்றுள்ளமை குறித்த தகவலும் ரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளது. சல்வார் ஆடையை அவர் அணிந்திருந்ததாகப் பலர் தெரிவித்துள்ளபோதிலும் அதன் நிறம் குறித்து ஒவ்வொருவரும் முரண்பாடான தகவல்களைத் தெரிவித்துள்ளனர்.

மூன்று மாத கர்ப்பிணி போன்று குண்டுதாரியின் வயிறு இருந்தாகவும், எனினும் பெருமளவான சாட்சிகள் அவ்வாறு எதனையும் தாம் காணவில்லையென தெரிவித்துள்ளனர். வயிற்றில் எதையாவது கட்டியிருப்பின் அது தற்கொலைத் தாக்குதலுக்கான ஆடைத் தொகுதியாக இருந்திருக்கலாமென ரகசிய பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (தே)

# நிதி மோசடியை கண்டறிய புலனாய்வுக் குழு அமைப்பு

கொழும்பு —

அரச நிறுவனங்களில் இடம்பெறும் நிதிமோசடிகளைத் தடுப்பதற்கும், அவற்றைக் கண்டறிவதற்குமென நிதி புலனாய்வுப் பிரிவொன்றை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக்கு சமர்ப்பித்த மனு, அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி புலனாய்வுத் துறையை அமைப்பதன் மூலம், அரச நிறுவனங்களில் இடம்பெறும் நிதி மோசடிகளைத் தடுக்க முடியுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தக் குழுவின் தலைவராக பலரது பெயர்களை அமைச்சரவை பெற்றபோதிலும் ஜோர்ஜ்.என்.பெர்னாண்டோ என்பவரை தலைவராக நியமிப்பதற்கு அமைச்சரவை பரிந்துரை செய்துள்ளது. இவர், மத்திய வங்கியின் ஆளுநருக்குத் தனது தகவல்களை நேரடியாக வழங்குவாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

*The Leading Daily of Tamils' Homeland*



காரைநகரில் கழுத்துவெட்டி படுகொலை செய்யப்பட்ட நிலையில் புதைகுழி ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட இளைஞனின் சடலம்

# நாட்டை நெருக்கடிக்குள் தள்ளவே புலிகள் திட்டமிட்டிருந்தனராம்!

## என்கிறார் ஜனாதிபதி மகிந்த

கொழும்பு—

ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையிலான படையினரை கொன்று நாட்டை நெருக்கடி நிலைக்குள் தள்ளவே விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

வெசாக் பண்டிகையை கொண்டாடும் எதிர்பார்ப்புடன் இருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் இந்த கீழ்த்தரமான செயற்பாட்டை மேற்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாட்டின்மூலம் மக்களை மனோரீதியான பாதிப்புக்குட்படுத்தி இனவாதச் சூழலை உருவாக்க விடுதலைப் புலிகள் எண்ணியிருந்தார்கள். இந்த செயற்பாடு ஒரு போர்நிறுத்த மீறலாகும். எனவே விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகம் கண்டிக்கவேண்டும்.

வெற்றிலைக்கேணி கடல் சமரின்போது வெற்றிகரமான முறியடிப்பு தாக்குதலில் பலியான அனைத்து படையினருக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் துயரத்தையும் அனுதாபத்தையும் தெரிவிக்கின்றேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## கடல் நடவடிக்கையில்...

திகதி கைச்சாத்திடப்பட்டபோது தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது கடற்புலிகளையும் கொண்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் இருப்பானது ஒரு அறிவிக்கப்படாத கடற்படையாகும். தற்போதைய போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு இராணுவச் சமநிலை என்பது அடிப்படையானது. இருதரப்பினரும் தங்களது படையினரை தொடர்ந்து வைத்திருக்கும்போது இருதரப்பினரும் தங்களது பிரதேசங்களில் பயிற்சிகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிமையுண்டு.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச கடற்பிரதேசங்களில் எமது கடற்படைக் கலங்கள் ஆயுதங்களுடன் பயணிக்கும் என்று பேச்சிலும் எழுத்திலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு பலமுறை நாம் தெரிவித்திருந்தோம்.

மேலும் எமது நடவடிக்கைகளில் கடற்படையினர் இடையூறு விளைவிக்கும்போது நாம் பதில் நடவடிக்கை மேற்கொள்வோம் என்றும் திரும்பத் திரும்ப கண்காணிப்புக்குழுவுக்குத் தெரிவித்திருந்தோம். இந்தக் காரணத்துக்காகவே கடற்படையினரின்கடற்கலங்களில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கண்காணிப்பாளர்கள் பயணிக்க வேண்டாம் என நாம் எச்சரித்திருந்தோம்.

இத்தகைய எச்சரிக்கை விடுக்கப்பட்டு எம்மால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களையும் இத்துடன் இணைத்துள்ளோம்.

இந்தப் பின்னணியில் மே 11 ஆம் திகதியன்று எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் கடற்பிரதேசத்தில் நாங்கள் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது எமது நடவடிக்கைகளுக்கு கடற்படையினர் இடையூறு விளைவிக்கவும் தாக்குதல் நடத்தவும் முனைந்தனர்.

ஆகையால் நாங்கள் பதில் தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரித்திருந்தோம்.

கடற்படையினரால் கடற்புலிகளின் கலங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் எமது 4 போராளிகள் வீரச்சாவடைந்தனர். இரு போராளிகள் படுகாயமடைந்துள்ளனர்.

மே 11 ஆம் திகதியன்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது -

இலங்கையை சுற்றியுள்ள கடற்பிரதேசமானது இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். இதனை சர்வதேச விதிகளுக்கு அமைய கண்காணிப்புக்குழுவின் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அரசசார்பற்ற சக்திகள் கடற்பிரதேசத்தையோ, வான் பிரதேசத்தையோ நிர்வகிக்க முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அத்தகைய உரிமையில்லை என அதில் தெரி வித்திருந்தனர்.

இராணுவச் சமநிலைக்கு கடற்புலிகளும் ஒரு அங்கம் என்றும் அவர்கள் தங்கள் பயிற்சிகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிமை உண்டு என்றும் முன்னர் கண்காணிப்புக்குழு வெளியிட்டிருந்த அறிக்கைக்கு இது முரணானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இதனடிப்படையிலும் எமது எச்சரிக்கைகளின் அடிப்படையிலும் கடற்படையின் கடற்கலங்களுக்குப் பாதுகாப்பாக கண்காணிப்புக்குழுவின் கடற் கண்காணிப்பாளர்கள் பயணிப்பது ஆபத்தானது. அதேநேரத்தில் எமது கடற்படையின் கடற்கலங்களுக்கோ எமது போராளிகளுக்கோ கண்காணிப் புக்குழுவினர் பாதுகாப்பு வழங்க வில்லை. இதிலும் மோசமாக - இந்தச் சம்பவமானது போர்நிறுத்த மீறலாக எமக்கு எதிராகக் கூறப்பட்டுள்ளது. மே 11 ஆம் திகதி கடல் சம்பவத்தைத் தொடர்ந்து விமானப் படையினர் வன்னிப்பிரதேசம் மீது குண்டுகளை வீசினர்.

திருகோணமலை சம்பூர் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமான எறிகணை மற்றும் ஆட்லறித் தாக்குதல்களை நடத்தினர்.

இந்தத் தாக்குதல்கள் பாரிய போர்நிறுத்த மீறல்களாகும். இருப்பினும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் இந்த பாரிய போர்நிறுத்த மீறல்களுக்குக் கண்டனம் தெரிவிக்கவில்லை.

கண்காணிப்புக்குழுவினரது இந்த பாரபட்ச செயற்பாடானது எமக்கு அதிர்ச்சியளிப்பதாகவும், அதிருப்தியளிப்பதாகவும் உள்ளது என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேவாலய ஊழியர் சுடப்பட்டுப் படுகாயம்

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - வாழைச்சேனை தேவாலயத்துக்குள் நேற்றிரவு இளைஞர் ஒருவர் சுடப்பட்டு படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு துப்பாக்கிதாரிகள் நேற்றிரவு 7 மணியளவில் அருள்செல்வன் அருள்ராஜ் என்ற 25 வயது இளைஞரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

கிரானைச் சேர்ந்த இந்த இளைஞர் வாழைச்சேனை மெதடிஸ்த தேவாலயத்தில் ஆண்கள் விடுதி மேற்பார்வையாளராக கடந்த இரு ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார்.

இவர் அருகில் உள்ள கடையில் பொருட்களை வாங்கிக்கொண்டு தேவாலயத்துக்குள் நடந்துசென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

படுகாயமுற்ற இவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## மாணவன்...

மூதூர் நகருக்குச் சென்றுவிட்டு நண்பருடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதன்போது காயமடைந்த இருவரும் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை பாலகுமார் உயிரிழந்தார்.

இவருடன் காயமடைந்த இவரது நண்பர் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

படுகொலை செய்யப்பட்ட மாணவன் பாலகுமார் திருகோணமலை நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுவந்தவர் என்றும் விடுமுறையில் மூதூரிலுள்ள தனது வீட்டுக்கு வந்தவேளை இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகவும் தெரியவருகிறது.

## இரு...

நின்றபோது இரு ஊர்காவல்படையினர்மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் காயமுற்ற ஊர்காவல் படையைச் சேர்ந்தவர் சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் மரணமானார்.

## கழுத்து...

பகுதியான தோப்புக்காட்டில் கழுத்தில் பாரிய வெட்டுக்காயத்துடன் குழி ஒன்றில் புதைக்கப்பட்ட நிலையில் இவரது சடலத்தை கண்டுபிடித்தனர்.

இதையடுத்து காரைநகர் கிராம சேவகர் ஊடாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

நேற்றுக்காலை சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்துறை மாவட்ட நீதிபதி விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (52)

## வெற்றிலைக்...

✦ மேஜர் மலர்நிலவன் (ஜேசுராஜா சாந்தன் - ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம்).

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இந்த மாவீரர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை செலுத்தியுள்ளனர்.

## கடற்படை...

சுக்கள் நடத்துவது குறித்து எங்களது தலைமைப்பீடம் தீர்மானங்களை மேற்கொள்ளும். பேச்சுவார்த்தை முயற்சிகளோ, இராணுவச் செயற்பாடுகளை எங்களுடைய மக்களது எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு பக்கபலமாக இருக்கவேண்டுமே தவிர, அதனைக் குழப்புகின்ற வகையில் எது அமைகிறதோ அதை நாங்கள் ஏற்றுக்கொண்டு எம்மை முடக்கிக்கொள்ளமுடியாது.

இனிவரும் நாட்களில் மகிந்த ராஜபக்ஷ அரசுடன் பேசுவதா, இல்லையா என்பதை நாங்கள் தீர்மானிக்கமுடியாது. எந்தத் தரப்பு குழப்பியடித்து அன்னியப்பட்டுச் செல்கிறதோ அந்தத் தரப்புத்தான் தீர்மானிக்கவேண்டும். ஆகையால், பேச்சுக்கள் தொடருமா என்பதை மகிந்த ராஜபக்ஷவிடமே கேட்க வேண்டுமென்றார் சு.ப.தமிழ்ச்செல்வன்.



மூதூரில் நேற்றுமுன்தினம் படையினரால் ஏவப்பட்டு வெடிக்காத நிலையில் உள்ள பல்குழல் பீரங்கி ஷெல் (04)

# வேலணையில் வயோதிபர் கடற்படையினரால் கைது!

யாழ்ப்பாணம்—

வேலணையில் கடற்படையினரால் 64 வயது முதியவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

தேடுதலில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் குறித்த முதியவரின் வீட்டுக்குப் பின்புறமாக இருந்து கிரனேட் ஒன்றை மீட்டதாகவும் - இதையடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டதாகவும் கடற்படையினர் கூறியுள்ளனர்.

இந்த வயோதிபர் ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

# புலிகளின் விமானதளம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாம்!

## அரச தகவல் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தொடர்வதைத் தடுத்து நிறுத்துவதற்கே விமானப்படையினர் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலில் ஈடுபட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இரணைமடுவில் விடுதலைப் புலிகளால் நிர்மாணிக்கப்பட்டுவருவதும், ஏற்கனவே இனங்காணப்பட்ட சட்டவிரோத விமானதளத்தை நோக்கியே விமானங்கள் தாக்குதல் நடத்தின. இந்தச் சட்டவிரோத விமானதளத்தால் இலங்கைக்கு மட்டுமல்ல - ஆசிய பிராந்தியங்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு பல தடவைகள் நாம் கொண்டுவந்தோம்.

இந்த விமானத்தளம்- தேசிய, சர்வதேச விமானத்தள விதிமுறைகளை மீறுவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இளைஞர் சுட்டுக்கொலை

அம்பாறை—

அம்பாறை - கல்முனை மருதமுனையில் நேற்று விசேட அதிரடிப் படையினரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் புலிகள் இயக்க உறுப்பினர் என படையினர் தெரிவித்தனர்.

## பொலிஸ் கொன்ஸ்டபிள் பலி

வவுனியா—

வவுனியாவில் நேற்று மாலை பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

# ஏழு சடலங்கள் கடற்படையால் மீட்பு

கொழும்பு—

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கடல் சமரின்போது கொல்லப்பட்ட 7 பேரின் சடலங்களைத் தாம் மீட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இந்த சடலங்களில் ஒன்று கடற்படைச் சிப்பாய் ஒருவரினது என அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன் 4 விடுதலைப் புலிகளின் படகுகளை கடலில் மூழ்கிய நிலையில் தாம் மீட்டிருப்பதாகவும் கடற்படை சுழியோடிகள் தொடர்ந்து தேடுதலை நடத்திவருவதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதலின்போது மொத்தம் 18 படையினர் காணாமற்போயிருப்பதாக கடற்படை அறிவித்துள்ளது.

கடற்படையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் 15 மாலுமி கள். மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த ஒரு தொலைத்தொடர்பாளர் ஆகியோரே காணாமற்போனதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## திருமலை...

சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் காலை கட்டைபறிச்சானிலுள்ள அவரது கடையில் இருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த நபரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, கட்டைபறிச்சான் இராணுவ முகாமிலிருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை படைத்தரப்பினர்மீது சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## தம்பாலையில் சுட்டுக்கொலை...

(வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

நேற்றுக்காலை 7.30 மணியளவில் அச்சுவேலி சன்னதி வீதி தம்பாலைச் சந்திப்பகுதியிலுள்ள தனது சிகை அலங்கரிப்பு நிலையத்தைத் திறந்து சுத்திகரிப்பில் ஈடுபட்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இரு இனந்தெரியாத நபர்கள் இவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச்சென்றதாக தெரியவருகிறது.

உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பொலிஸாரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்ற இடம் அதியுயர் பாதுகாப்பு வயைத்தில் உள்ளடங்கியிருப்பதோடு சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் இராணுவ முகாமொன்றும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.